REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 மார்ச் 7 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 90 இல. 56 | Monday 07, March, 2022 | 20பக்கங்கள் | 30/-

இன்னும் 09 நாட்கள்!
தினகரன்

மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை அரசு கூடுதலான ஈடுபாடு

அண்மைக்காலத்தில் உணர முடிவதாக மிச்செல் பச்லெட் தெரிவிப்பு

மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை இனங்கண்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் கூடுதலாக ஈடுபடுவதை அண்மைக்காலத்தில் காணமுடிந்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான விவாதத்தின்போது அவர் நேற்று இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் உரிமைகளை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் தற்போதைய 06

எரிபொருள் நெருக்கடிக்கு இன்னும் சில நாட்களில் தீர்வு

அமைச்சர் காமினி லொகுகே உறுதி

நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆகவே எரிபொருள் நெருக்கடி இன்னும் சில நாட்களில் முடிவுக்கு வரும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே உறுதியளித்தார்.

இதேவேளை எரிபொருள் மற்றும் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக இதுவரை 06

எரிபொருள் நெருக்கடி என்பதாக பரவும் செய்திகள் பொய்யானது

நாட்டு மக்கள் குழப்பமடைய இதுவே காரணம் - பிரதமர்

எரிபொருள் நெருக்கடி என்ற தவறான கருத்து காரணமாகவே மக்கள் அச்சத்தில் உள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எரிபொருள் இருப்பு நான்கு நாட்களுக்கு மட்டுமே இருக்கின்றது என தவறான செய்திகள் பரவுவதாக தெரிவித்த அவர், நாட்டில் எவ்வித எரிபொருள் நெருக்கடியும் இல்லை எனவும் கூறினார்.

அரசியலில் குறைந்த அனுபவம் கொண்டவர்களினால் வெளியிடப்படும் இவ்வாறான அறிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்த பிரதமர், இவ்வாறான செய்திகள் காரணமாக 06

நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு மத்தியில்

அரசாங்க பாடசாலைகள் இன்று முதல் மீள ஆரம்பம்

பகுதி பகுதியாக வகுப்புகளை நடத்த அமைச்சு தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க மற்றும் அரச அனுசரணையுடனான பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, நேற்றைய தினம் நாடளாவிய அனைத்து பாடசாலைகளிலும் துப்புரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் பங்கேற்புடன் வகுப்பறைகள் மற்றும் பாடசாலை சுற்றாடலில் துப்புரவு செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை 06

பாடசாலை அதிபர்களுக்கு கல்வியமைச்சு விசேட சுற்று நிருபம் மூலமாக அறிவுறுத்து

ஜெனீவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரின் பக்க அம்சமாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஈரான் ஆகியவற்றின் நிரந்தர பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தமிழர் பிரச்சினையை தீர்க்கும் சக்தி TULFக்கு மட்டுமே உள்ளது

தகுதி, அனுபவம் உள்ள ஒரே ஒரு கட்சி எமதே - சங்கரி 03

டொலர் தட்டுப்பாட்டால் மூன்று Gas கப்பல்கள் துறைமுகத்தில்!

சந்தையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைக்கு அதுவே காரணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் 3 கப்பல்கள் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட நிலையில் டொலர் இல்லாததால் சிலிண்டர்களை இறக்கமுடியாதுள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனால் கடந்த முதலாம் திகதி முதல் நாட்டில் எந்த பிரதேசத்திற்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிக்க முடியாமல் 06

ஜனாதிபதியுடன் SLFP நாளை விசேட சந்திப்பு

அரசியல், நாட்டு நிலைமை குறித்து கலந்துரையாடல்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்குமிடையிலான விசேட பேச்சுவார்த்தையொன்று நாளை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் இங்கு தீர்க்கமாக கலந்துரையாடப்படவுள்ளதாக அரசியல் 06

சட்ட விரோத சொத்து சேகரித்த 21 பேர் கைது

78 கோடி ரூபா சொத்துக்களுக்கும் தடை

சட்டவிரோத பொருட்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவின் ஊடாக சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் ஆயிரத்துக்கும் அதிகமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, இதுவரை 21 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்த பிரிவின் ஊடாக 78 கோடி ரூபாவுக்கும் 06

முதுபெரும் நடிகர் பேர்ட்டி குணதிலக நேற்று காலமானார்

இலங்கையின் மூத்த நகைச்சுவை நடிகர் பேர்ட்டி குணதிலக தனது 97வது வயதில் காலமானார். கஹவத்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். 06

எந்தவொரு தடுப்பூசியும் பெறாத ஏழு இலட்சம் பேர்

நாட்டில் இருப்பதாக Dr. ஹேமந்த தெரிவிப்பு

நாட்டில் சுமார் 07 இலட்சம் பேர் இதுவரை எந்தவொரு கொரோனா தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதுவரை 169 இலட்சம் பேர் முதலாவது கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன், மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 72 இலட்சத்தை தாண்டியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்துடன்

ஆளும் தரப்பு ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம்; எஸ்.பிக்கு முன்வரிசை

ஷம்ஸ் பாஹிம்

அமைச்சரவை மாற்றத்துடன் ஆளும் தரப்பு எம்.பிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். கைத்தொழிற்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில 06

பூஸ்டர் தடுப்பூசியை துரிதமாக பெறுமாறு அரசு அறிவுறுத்தல்

ஏப்ரல் 30முதல் தடுப்பூசி அட்டை அவசியமாகிறது

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கொவிட்19 செயலூக்கி (பூஸ்டர்) பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மீண்டும் பொது மக்களுக்கு அறிவிப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் பொது இடங்களில் முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டமைக்கான அட்டையை கைவசம் வைத்திருத்தல் அவசியமாகும்.

இதன்காரணமாக அதற்கு முன்னர் செயலூக்கி 06

வாகன விபத்தில் தந்தை – மகன் பலி!

பஸ் மீது மக்கள் தாக்குதல்

ஓமந்தை நிருபர்

வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில் நேற்றுக் காலை பஸ்ஸொன்று முச்சக்கர 06

மூன்று மாதங்களுக்குள் A/L பரீட்சை முடிவுகள்

பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் 06

ரஷ்ய நெருக்கடி எதிரொலி!

தங்கத்தின் விலை திடீரென அதிகரிப்பு

ரஷ்யா உக்ரைனுக்குமிடையிலான போர் பதற்றம் உலகளாவிய ரீதியில் பல்வேறு தாக்கங்களை செலுத்தி வருகின்றது. அந்த வகையில் உக்ரைன் நெருக்கடி, தங்கத்தின் விலை உயர்வுக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.

உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் 06

வெளிநாட்டு கடன் 1,400 பில்லியனானது

ஆளுநர் அஜித் கப்ரால் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

டொலரின் பெறுமதியை சுயாதீனமாக தீர்மானிப்பதற்கு இடமளித்தால் அதன் பெறுமதி 240 ரூபாவாக அமையுமென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, வெளிநாட்டு கடன்களுக்காக செலுத்தவேண்டிய தொகை 1,400 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். 06

யாழ்ப்பாணத்துக்கு

மேலுமொரு கடுகதி ரயில் சேவை ஆரம்பம்

வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரை இரவு நேர கடுகதி சேவையை தொடர்ந்து ஆரம்பிக்க புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, வெள்ளவத்தையில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்குப் புறப்படும் புகையிரதம் சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். இந்த புகையிரதம் திங்கட்கிழமை அதிகாலை 06

விக்கல் வீராச்சாமி

கொரோனாவால சாகுற ஆட்களின்ர பொடிய இனி அவங்கட உறவினர்களிடமே வழங்குகிற மாதிரி சட்டம் வந்திருக்கு நல்லது தானே....

ரொம்ப நல்லது, கொரோனா அச்சுறுத்தல் குறைஞ்சிருக்கிறதால அரசாங்கம் திட்டமிட்டு மக்களுக்கு நல்லத செய்யுது...!!!

வண்ண வானவில்
மார்ச் மாத இதழ் இப்போது கடைகளில்...
வாசியுங்கள், வாசிக்க வாங்கிக் கொடுங்கள்

ஆனந்த விகடன், குமுதம் இல்லை
எனக் கவலை வேண்டாம்
இருக்கவே இருக்கிறது வண்ண வானவில்!

சர்வதேச செய்திகள்

வான் தடை வலயம்: ஐரோப்பாவுக்கு விளாடிமிர் புட்டின் கடும் எச்சரிக்கை

உக்ரைனில் "வான் தடை வலயம்" ஒன்றை அமைக்கும் முயற்சிக்கு எதிராக மேற்குலக சக்திகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடுமையாக எச்சரித்துள்ளார். அவ்வாறான முயற்சி ரஷ்யா மற்றும் உக்ரைன் படைகளுக்கு எதிரான இராணுவ மோதலில் மற்றொரு நாடு ஈடுபடுவதாக கருதப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இவ்வாறு எந்த நாடேனும் செயற்பட்டால் அந்த நாடு ஆயுத மோதலில் பங்கேற்பதாக நாம் கருதுவோம்" என்று மொஸ்கோவுக்கு வெளியில் எரோபிளோட் ஊழியர்களுடன் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது புட்டின் கூறினார்.

"வான் தடை வலயம் ஒன்றை செயற்படுத்துவது ஐரோப்பாவுக்கு மாத்திரமல்ல முழு உலகுக்கும் மகத்தான மற்றும் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

வான் தடை வலயம் ஒன்று இல்லாதது உக்ரைன் நகரங்கள் மற்றும் சிறு நகரங்கள் மீது ரஷ்யா தொடர்ந்து குண்டு வீசுவதற்கு பச்சைக் கொடி காட்டுவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

எனினும் உக்ரைனில் அனுமதி இல்லாத அனைத்து விமானங்களையும் தடுக்கும் வான் தடை வலயத்தை நிறுவுவது, அணு ஆயுத நாடான ரஷ்யாவுடன் ஐரோப்பாவில் பரந்த போர் ஒன்றை தூண்டிவிடும் என்று நேட்டோ தெரிவித்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையே இன்று 3ஆம் சுற்றுப் பேச்சு

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான மூன்றாம் சுற்று அமைதிப் பேச்சுவார்த்தை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உக்ரைன் பேச்சுவார்த்தையாளர் டேவிட் அரகாமியா இந்த சந்திப்புப் பற்றிய செய்தியை தனது பேஸ்புக் பக்கத்தில் கடந்த சனிக்கிழமை வெளியிட்டிருந்தார்.

எனினும் சீன தரப்பில் பேச்சுவார்த்தை திங்கட்கிழமை தொடங்கலாம் என்று உறுதி அற்ற வகையில் கூறப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா முழு வீச்சில் படை நடவடிக்கை ஆரம்பித்தது தொடக்கம் இரு தரப்பும் இதுவரை இரு முறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் யுத்த வலயங்களில் இருந்து பொதுமக்கள் வெளியேற மனிதாபிமாக பாதையை அமைக்க இணக்கம் எட்டப்பட்டபோதும், ரஷ்யா போர் நிறுத்தத்தை செயற்படுத்தவில்லை என்று உக்ரைன் குற்றம்சாட்டும் நிலையில் இதனை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இரு நாட்டுக்கும் இடையிலான போரில் உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி நேட்டோவின் நேரடி உதவியை நாடும் நிலையில் அது இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு உதவாது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் எச்சரித்துள்ளார். எனினும் ரஷ்யா மூன்றாவது சுற்று பேச்சுக்கு தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பள்ளிவாசல் தற்கொலை குண்டு: உயிரிழப்பு 62 ஆக அதிகரிப்பு

வடமேற்கு பாகிஸ்தானில் ஷியா பள்ளிவாசல் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்திருப்பதோடு, சம்பவ இடத்தில் இருந்து துண்டிக்கப்பட்ட இரு கால் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து தற்கொலைதாரியை அடையாளம் காணும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

பெஷாவர் நகரின் கொசா ரைசல்தர் பகுதியில் இருக்கும் பள்ளிவாசலுக்கு நுழைவதற்கு முன் தாக்குதல்தாரி இரு பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் சி.சி.டீ.வி காட்சியையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்தே அவர் தான் கட்டிவந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார். வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை ஆரம்பிப்பதற்கு சற்று முன்னரே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசு குழு பொறுப்பேற்றுள்ளது.

"குண்டுதாரியுடையது என்று நம்பப்படும் துண்டிக்கப்பட்ட இரு கால்கள் உட்பட அடையாளம் காண முடியாத நிலையில் ஏழு உடல்கள் உள்ளன" என்று பெஷாவர் பொலிஸ் தலைவர் முஹமது இஜாஸ் கான் தெரிவித்தார்.

உக்ரைனில் 11ஆவது நாளாக ரஷ்யப் படை கடும் தாக்குதல்

அகதிகள் ஒன்றரை மில்லியனாக உயர்வு

உக்ரைன் மீதான தாக்குதல்களை நேற்று 11 ஆவது நாளாகவும் ரஷ்யா உக்கிரப்படுத்திய நிலையில், உக்ரைனில் இருந்து வெளியேறிய அகதிகளின் எண்ணிக்கை ஒன்றரை மில்லியனைத் தொட்டுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராக மேலும் தடைகள் மற்றும் ஆயுத உதவிகள் என மேற்குலக நாடுகளிடம் இருந்து உக்ரைன் மேலும் உதவிகளை கோரியுள்ளது.

ரஷ்ய படைகளின் முற்றுகையில் இருக்கும் இரு தெற்கு நகரங்களான மிரியுபோல் மற்றும் வொல்னொவகாவில் இருந்து பொதுமக்கள் வெளியேற அனுமதிக்கும் போர் நிறுத்தம் ஒன்று கடந்த சனிக்கிமை தோல்வி அடைந்ததற்கு இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டியுள்ளன. உக்ரைனியர்கள் அண்டை நாடுகளான போலந்து, ருமேனியா, ஸ்லோவாக்கியா மற்றும் ஏனைய பகுதிகளில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள நகரங்களில் இருக்கும் மக்கள் ரஷ்ய துருப்புகளுக்கு எதிராக போராடும்படி கடந்த சனிக்கிழமை இரவு தொலைக்காட்சியில் உரையாற்றிய உக்ரைன ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

"நாம் வெளியே வந்து எமது நகரங்களில் இருக்கும் இந்தக் கொடியவர்களை துரத்த வேண்டும்" என்று குறிப்பிட்ட அவர், தமது தேசத்தை கட்டியெழுப்புவதாக உறுதி அளித்தார்.

உக்ரைன் ஆக்கிரமிப்புக்கு எதிராக ரஷ்யா மீது தடைகளை தீவிரப்படுத்தி இருக்கும் மேற்குலக நாடுகள் ரஷ்யாவை தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

உக்ரைன் மற்றும் போலந்து எல்லையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கனை சந்தித்த உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ட்மிட்ரோ குலெபா, எதிர்வரும் நாட்களில் புதிய தடைகள் விதிக்கப்படும் என்றும் உக்ரைனுக்கு ஆயுதங்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு மேலும் ஆயுதங்கள் வழங்குவதாக அமெரிக்கா குறிப்பிட்டிருப்பதோடு நெருக்கடிக்கு பதிலளிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 10 பில்லியன் டொலர் அவசர நிதியுதவியுடன், ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் அதிகரிக்கலாம் என்று பலரும் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க எம்.பிக்களுடன் வீடியோ அழைப்பு ஒன்றின் மூலம் பேசிய செலென்ஸ்கி ஐரோப்பிய கூட்டாளிகளிடம் இருந்து விமான உதவிகளைக் கோரினார். இதன்போது மேலும் ஆயுத உதவிகளைக் கேட்ட அவர் ரஷ்யாவின் எண்ணெய்க்கு தடை விதிக்கவும், வான் பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைக்கவும் கோரியதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பைடன் மற்றும் செலென்ஸ்கியும் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதோடு இதில் பாதுகாப்பு, உக்ரைனுக்கான நிதியுதவி மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக தொடர்ச்சியாக தடைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக உக்ரைன் தலைவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய படைகளால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கும் மரியுபோல் நகரில் கடந்த சில நாட்களால் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றுவரும் நிலையில் அங்கு நிலைமை மோசமடைந்துள்ளது. அங்குள்ள மக்கள் மின்சாரம் மற்றும் குடிநீர் இன்றி உள்ளனர்.

"வீதியில் இருக்கும் அனைத்து உடல்களையும் எம்மால் சேகரிக்க முடியாதுள்ளது" என்று பிரதி மேயர் செர்கெய் ஓர்லோவ் சி.என்.என் தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். பொதுமக்களின் உயிரிழப்பு எண்ணிக்கையை கணக்கெடுக்க முடியாதிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 350க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருப்பதாக ஐ.நா கணித்துள்ளது.

வொல்னோவாகாவில் இருந்து தப்பிச்செல்லும் குடியிருப்பாளர்கள் பின்னணியில் கடும் ஷெல் குண்டு சத்தங்கள் கேட்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

தலைநகர் கியேவுக்கு வெளியில் 40 மைல் நீண்ட ரஷ்ய இராணுவ வாகனத் தொடரணி தொடர்ந்து ஸ்தம்பித்த நிலையில் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் இயன்றவரை தேர்வு செய்யப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

வடமேற்கு கியேவின் இர்பின் நகரில் கடும் மோதல் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஹொஸ்டோமல் விமானத்தளத்திற்கு அருகிலேயே இந்த நகர் உள்ளது.

வீசா, மாஸ்டர்கார்ட் ரஷ்யாவில் முடக்கம்

பிரபல பணம் செலுத்தும் நிறுவனங்களான வீசா மற்றும் மாஸ்டர் கார்ட், ரஷ்யாவில் தமது செயற்பாடுகளை இடை நிறுத்தியுள்ளன.

"தற்போதைய பிரச்சினையின் முன்னெப்போதும் சந்திக்காத அம்சம் மற்றும் நிச்சயமற்ற பொருளாதார சூழல் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று மாஸ்டர் கார்ட் தெரிவித்துள்ளது. "ரஷ்யாவுக்குள் செயற்படும் வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாளிகள் எதிர்வரும் நாட்களில் அனைத்து வீசா பரிவர்த்தனைகளையும் நிறுத்த வேண்டும்" என்று வீசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யாவில் வர்த்தகங்களை முடக்கும் பிரதான அமெரிக்க நிறுவனங்களின் தொடர்ச்சியாகவே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தியரின் பாதுகாப்பான பயணத்திற்கு வலியுறுத்து

உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் இருந்து தமது மக்கள் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும்படி இந்திய வெளியுறவு அமைச்சு கோரியுள்ளது.

"எமது மக்களின் பாதுகாப்பான பயணத்திற்கு ரஷ்யா மற்றும் உக்ரைன் இரு தரப்பையும் நாம் வலியுறுத்துகிறோம். பாதை ஒன்றுக்கு ரஷ்யா தீர்வு தருவதாக இருந்தால் சிறந்தது. அதுதான் வழியாக இருக்கும் என்றபோது கார்கிவின் தென்மேற்கில் இருந்து வெளியேறுவதற்கான அறிகுறிகள் உள்ளன. நாம் அனைத்து தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருகிறோம்" என்று வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தாம் பக்ஷி தெரிவித்தார்.

ஜப்பானில் அமெ. விமான ஒத்திகை

தாய்வான் மீதான சீனாவின் படையெடுப்பு அச்சத்திற்கு மத்தியில் அமெரிக்கா ஜப்பானில் உள்ள தனது விமானத் தளத்தில் போர் விமானங்களை செலுத்தி காட்சிப்படுத்தியுள்ளது.

கடேனா விமானத் தளத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அணி வகுப்பு, "வழக்கமான விமானத் தயார்நிலை ஒத்திகை" என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், முன்னாள் மூத்த பாதுகாப்பு அதிகாரிகளை தாய்வானுக்கு அனுப்பி தனது ஆதரவை வெளியிட்ட இரு தினங்களிலேயே இந்த ஒத்திகை இடம்பெற்றுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு சீனா, தாய்வானை ஆக்கிரமிக்கத் தூண்டும் என சந்தேகிக்கப்படுகிறது.

ஆப்கான்: இந்தியா கோதுமை உதவி

கடுமையான உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் பற்றாக்குறைக்கு உள்ளாகியுள்ள ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இந்தியா முதற் தடவையாக 2500 மெற்றிக் தொன் கோதுமையை 50 லொறிகளில் அனுப்பி வைத்துள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த முதல் தொகுதி கோதுமை, உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் ஆப்கானிஸ்தானுக்கு 50,000 மெற்றிக் தொன் கோதுமையை வழங்குவதாக ஏற்கனவே அறிவித்திருந்ததற்கு அமைய இந்தியாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'நெருப்பில் எண்ணெய் ஊற்றும்' செயலுக்கு சீனா கடும் எதிர்ப்பு

உக்ரைனில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் எந்த ஒரு செயற்பாட்டையும் சீனா எதிர்ப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் இடம் சீன வெளியுறவு அமைச்சர் வங் யி தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் மற்றும் இறைமைக்கு ஆதரவான கொள்கை பக்கம் நிற்கும் நாடுகளை அவதானித்து வருவதாக பிளிங்கன் இதன்போது கூறியுள்ளார். இந்த இருவரும் கடந்த சனிக்கிழமை தொலைபேசியில் உரையாடியதாக சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

உடனடி நெருக்கடியை தீர்க்க பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த வங், சமநிலையான ஐரோப்பிய பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்குவதாகவும் பேச்சுவார்த்தை அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நேட்டோவின் கிழக்கு பக்கமான விரிவாக்கத்தால் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஏற்படும் பாதகமான தாக்கத்தை பற்றி அமெரிக்கா மற்றும் ஐரோப்பா அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய படையெடுப்புக்கு எதிராக உலகம் ஒன்றிணைந்து செயற்படுவதாகவும் ரஷ்யா அதிக விலைகொடுக்க வேண்டி இருக்கும் என்றும் பிளிங்கன் கூறியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்புக்கு எதிராக அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகள் செயற்படுத்தும் தடைகளில் இருந்து சீனா விலகி நிற்கிறது. இந்தத் தடைகள் புதிய பிரச்சினைகளையும் அரசியல் தீர்வுக்கான செயற்பாட்டில் இடையூறையும் ஏற்படுத்தும் என சீனா கூறுகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 7 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
05 முதல் 09 வரை
சுபஹ் - 05.06
லுஹர் - 12.23
அஸர் - 03.41
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 23
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பஞ்சமி

பிரதமரினாலேயே நாடு தப்பியுள்ளது;

எதிரணியின் நாட்டை குழப்பும் சதிக்கு அரசிலிருக்கும் சிலர் துணை

உள்ளேயும் வெளியேயும் எதிரிகள் என்கிறார் ஜோன்ஸ்டன்

மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையையே எமது ஜனாதிபதியும் பின்பற்றுவதாகவும் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ இருப்பதாலே ஜனாதிபதியும் அரசாங்கமும் தப்பித்துள்ளதாகவும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டை குழப்ப வேண்டும் என்ற சஜித் பிரேமதாசவினதும் அநுர திஸாநாயக்கவினதும் நோக்கத்தை சிலர் அரசாங்கத்திற்குள் இருந்து செய்ய முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாரம்மல பிரதேச சபையின் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நெடுஞ்சாலை அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

குடும்ப உறுப்பினரைப் போல நினைத்து உதவி செய்யுமாறு கோரியதை ஏற்றுக்கொண்டு அறுபத்தொன்பது லட்சம் மக்கள் ஆதரவாக வாக்களித்தார்கள். 2015 க்குப் பிறகு நீங்கள் ஜனாதிபதியாக இருந்திருந்தால், கொவிட் அல்ல, எந்த நெருக்கடியானாலும் நமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்காது. நீங்கள் உருவாக்கிய பொருளாதாரம் அழிக்கப்பட்டது. நீங்கள் உருவாக்கிய தேசிய பாதுகாப்பு அழிக்கப்பட்டது. அதனால்தான் டொலர் நெருக்கடி ஏற்பட்டது. சஹ்ரான் நடத்திய தாக்குதலுக்குப் பிறகுதான் வெளி நாட்டவர் நாட்டிற்கு வருவது தடைப்பட்டது.

உள்ளேயும் வெளியேயும் எதிரிகள் இருக்கையில் இன்னொருவர் பிரதமராக இருந்தால் நாட்டுக்கு என்ன நடந்திருக்கும். உங்களால் தான் ஜனாதிபதியும் அரசாங்கமும் தப்பித்துள்ளது. பொம்மை பிரதமர் ஒருவர் இருந்திருந்தால் இன்றைக்கு இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் அழிந்திருப்பார்கள். இவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, ஜனாதிபதி

06

தவக்கால சிந்தனை

பிறரன்பின் காலம்

தவக்காலத்தின் முதல் வாரத்தினுள் நுழைந்து நம்பிக்கை வாழ்வுப் பயணத்தினைத் தொடர்கின்ற நமக்கு இன்றைய நற்செய்தி இறைவார்த்தையானது தவக்காலத்தின் சிறப்புப் பண்புகளுள் ஒன்றாகிய தர்மச் செயல்கள் குறித்து சிந்திக்க தியானிக்க அழைக்கிறது.

நற்செய்தியில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்பிக்கையாளர்கள் இறையரசினுள் நுழைவதற்கான அனுமதியின் தகுதியினைக்குறித்துக் குறிப்பிடுகின்றார். இறுதித் தீர்வையின் நாளில் இறைவனின் முன்னிலையில் அனைவரும் ஒன்று கூட்டப்படுவர். அவர்கள் இரு குழுக்களாக செம்மறியாடுகள் வலப்பக்கமும், வெள்ளாடுகள் இடப்பக்கமுமாக நிறுத்தப்படுவர்.

அப்போது மானிடமகன் வலப்பக்கத்தில் உள்ளோரை நோக்கி 'என் தந்தையின் ஆசீர் பெற்றவர்களே! உலகம் தொடங்கியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள் ஏனெனில் நான் பசியாய் இருந்தேன் உண்ணக் கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் குடிக்கக் கொடுத்தீர்கள், ஆடையின்றி இருந்தேன் உடுத்தினீர்கள், அன்னியனாக இருந்தேன் ஏற்றுக்கொண்டீர்கள், நோயுற்று இருந்தேன் கவனித்துக் கொண்டீர்கள், சிறையிலிருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்.' அப்போது நல்லவர்கள் எழுப்பும் கேள்வியானது 'எப்போது ஆண்டவரே நாம் இவற்றையெல்லாம் உமக்குச் செய்தோம்' என்பதாகும்.

அவ்வேளையில் மானிடமகனின் பதிலானது: "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்பதாகும்.

தவக்காலம் வெறுமனே இறைவேண்டலுடனும், நோன்புடனும், தவக்கால ஒழுக்கங்களுடனும் நிறைவடைகின்ற காலம் கிடையாது. மாறாக அது பிறரன்பின் காலமாகும். மானிடர் நம்மை நற்செயல்கள் புரிய அழைப்பு விடுக்கின்ற காலமாகும். நமது நற்செயல்களால் நாலுபேர் நன்மை அடைய வேண்டுமென்பது இறைவனின் விருப்பமாகும்.

நமது வாழ்வானது அடுத்தவர்களுக்கு சுமையாக மாறிவிடாது, அடுத்தவர்களுக்கு கனிவினைத் தருவதாக அமைய வேண்டுமென்பது இறைவனின் விருப்பமாகும்.

நாம் இவ்வுலக வாழ்வினை முடித்து விட்டு விடைபெறுகின்றபோது நம்முடன் கூடவே பயணிக்க இருப்பது ஒன்றே தான், அதுதான் நாம் இவ்வுலகத்தில் விதைத்துவிட்ட புண்ணியங்கள். அதற்கு அழிவு கிடையாது. அதுவே நம்மை உலகிற்கு அடையாளப்படுத்தும்.

அருட்தந்தை நவாஜி...

போக்குவரத்து விதிகளை மீறினால் அபராத பட்டியல் வீட்டுக்கு வரும்

புதிய நடைமுறை விரைவில் ஆரம்பம்

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களின் அபராதப் பட்டியலை வீடுகளுக்கு அனுப்பும் திட்டமொன்றை விரைவில் ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு நகர கண்காணிப்பிற்கான சீசீரீவி கண்காணிப்புப் பிரிவை அமைச்சர் அண்மையில் பார்வையிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது 2010ஆம் ஆண்டு இந்தப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த பிரிவின் முக்கிய கருப்பொருள் மக்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பதாகும்.

மேலும், இந்த கண்காணிப்பு பிரிவின் மூலம் போக்குவரத்து கண்காணிப்பு மேற்கொள்வதாகும். போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மந்தகதியில் இருப்பதாகவும், இதனை தவிர்க்க மோட்டார்

06

அரசில் அங்கம் வகிக்கும் 10 கட்சிகளின்

16 எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் 10 கட்சிகளின் 16 எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறுள்ள பேச்சுவார்த்தையையடுத்து மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிணங்க, அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளாக செயற்படும் விமல் வீரவன்சவின் கட்சியில் ஆறு எம்.பிக்களும் வாசுதேவ நாணயக்காரவின் கட்சியிலிருந்து இரண்டு பேரும், உதய கம்மன்பில, அதுரலிய ரதனதேரர், டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்ட 16 பேரே பாராளுமன்றத்தில் இவ்வாறு சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசியல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர்

06

முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு

ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம அதிதி

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் இருபத்தைந்தாவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு அல்-ஹிதாயா மகா வித்தியாலய பஹார் தீன் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த மாநாட்டில், முதல் அமர்வில் பிரதம அதிதியாக ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், இந்திய லோக்சபா பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பிப்பதோடு, கலாநிதி எம்.சி. ரஸ்மின், 'முஸ்லிம்களும் ஊடக எதிர்காலமும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாவது அமர்வில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும். புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் மற்றும் யாப்புத்திருத்தம் பற்றியும் இதன்போது அறிவிக்கப்படும்.

சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பேணி இம்மாநாடு நடாத்தப்படவிருப்பதால் அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இம்மாநாடு நடைபெறவிருப்பதாக போரத்தின் செயலாளர் என்.ஏ.எம். ஸாதிக் சிஹான் தெரிவித்தார்.

சகல அங்கத்தவர்களுக்கும் மாநாடு சம்பந்தமாக

06

தமிழர் பிரச்சினையை தீர்க்கும் சக்தி TULFக்கு மட்டுமே உள்ளது

தகுதி, அனுபவம் உள்ள ஒரே ஒரு கட்சி எமதே - சங்கரி

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினையை தீர்க்க கூடிய தகுதி தத்துவம் எல்லாம் உள்ள ஒரே ஒரு கட்சி தமிழர் விடுதலை கூட்டணி மாத்திரம்தான் வேறு எந்த கட்சியாலும் முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழ் மக்கள் நாளுக்கு நாள் வேறு வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி செல்லுகின்றனரே தவிர உண்மையில் நாட்டிலே எந்த பிரச்சினை இருந்து அதற்கு என்ன தீர்வு காண ஆரம்பித்தோமோ அதை எல்லாம் படிப்படியாக மறந்து இப்ப புது புது பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் இனப்பிரச்சினை காணப்பட்டபோது எங்களுடைய அத்தனை பிரச்சினைகளை உள்ளடக்கியதாக இருந்தது. ஆனால் இன்று ஒவ்வொரு கட்சி ஆரம்பித்து வருகின்றது. இதனால் உண்மையான தமிழ் மக்களின் பிரச்சினை வழுவிழந்து போகின்றது இதனை எவரும் உணர்வதாக இல்லை. எங்களுக்கு முக்கியமான பிரச்சினை

06

200 மெ.வோ அவசர மின்கொள்வனவு மேற்கொள்ள மின்சார சபை கோரிக்கை

200 மெகாவோட் மின்சாரத்தை விலைமனு கோராமல் அவசரமாக கொள்வனவு செய்யுமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் தலைவரின் எதிர்ப்புக்கு மத்தியில் பொது முகாமையாளர் இந்த கடிதத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இரண்டு வருட காலத்திற்கு தனியார் டீசல் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து அவசர மின்சாரம் கொள்வனவு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த அவசரக் கொள்வனவுகளுக்கு உடன்பாடு ஏற்பட்ட பின்னரும் அந்த தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படாவிட்டாலும், ஒப்பந்த காலத்திற்குள் உரிய ஒப்பந்தத் தொகையை மின்சார சபை

06

டெங்கு காய்ச்சலினால்

மீசாலையில் ஒரு வயது குழந்தை மரணம்

சாவகச்சேரி விசேட நிருபர்

மீசாலை வடக்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த ஒரு வயதும் மூன்று மாதங்களும் நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று டெங்குக் காய்ச்சல் காரணமாக சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளது. சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மீசாலை வடக்கைச் சேர்ந்த வா.லிபிஷன் என்ற குழந்தையே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

புதிய சீமெந்து தொழிற்சாலையை ஜனாதிபதி இன்று திறந்து வைப்பார்

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

இரண்டு வருடகாலத்திற்கு முன்னர் ஹம்பாந்தோட்டை மாகம்புர மிரிஜ்ஜவிலை கைத்தொழில் வலயத்தில் மாகம்புர லங்வா கைத்தொழில் நகரத்தில் இலங்கை ஏற்றுமதி சபையின் அனுமதியுடன் லங்வா சன்ஸ்தா கோபரேஸன் தனியார் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பெரிய

சீமெந்து தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு

சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை இன்று 07 ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இவர்களுடன் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மேலும் பலரும் இந்தநிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்த சீமெந்து தொழிற்சாலையின்

06

இரத்தினபுரியில்

லொறி - ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து; இருவர் பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி பட்டுகெதர பிரதேசத்தில் நேற்று (6) இடம் பெற்ற லொறி முச்சக்கரவண்டி விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

நேற்று காலை இடம் பெற்ற இவ் விபத்தில் மகரகம பிரதேசத்தை சேர்ந்த

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	143.95	149.96
கனடியன் டொலர்	155.27	161.13
யூரோ	218.91	228.36
ஜப்பான் யென்	1.7086	1.7726
சிங்கப்பூர் டொலர்	145.58	150.30
ஸ்டேலிங் பவுன்ஸ்	263.51	271.91
சுவிஸ் பிராங்க்	214.59	222.18
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	534.77	கட்டார் ரியால்	55.31
குவைத் டினார்	665.00	சவூதி ரியால்	53.74
ஓமான் ரியால்	523.70	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.89

தினகரன்

THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 03

குறள் தரும் சிந்தனை



தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக் காரணம் இன்றி வரும்

உறவினராகஇருந்துஏதோஒருகாரணம்கூறிப்பிரிந்து சென்றவர்கள், அந்தக் காரணம் பொருந்தாது என்று உணரும்போதுமீண்டும்உறவுகொள்ளவருவார்கள்.

பாடசாலைகள் ஆரம்பமாகும் வேளையில் கொவிட் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள்

பாடசாலைகள் நீண்ட விடுமுறைக்குப் பின்னர் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன. என்றாலும் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னரைப் போன்று பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடிய சூழல் இன்னும் நாட்டில் உருவாகவில்லை. அதற்கு கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடித்துக் கொண்டிருப்பதே பிரதான காரணமாகும்.

2020 மார்ச் மாத நடுப்பகுதி முதல் கொவிட் 19 தொற்று இந்நாட்டில் பதிவாகத் தொடங்கியதால் கடந்த 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் பாடசாலைகள் பல மாதங்கள் மூடப்பட்டிருந்தன. ஆனாலும் மாணவர்களில் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் இணைய தளம் உள்ளிட்ட மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் 2021 இறுதிப் பகுதி முதல் இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகளைப் பின்பற்றியபடி கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

அந்த வகையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமானதும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. அவ்விடுமுறை நிறைவுற்று கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று முதல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் பாடசாலைகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் அடங்கிய அறிவுறுத்தல் வழிகாட்டல்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலை தவிர்த்துக் கொள்வதையும், கட்டுப்படுத்திக் கொள்வதையும் நோக்காகக் கொண்டதாக இவ்வறிவுறுத்தல் அமைந்திருக்கின்றது. இவ்வறிவுறுத்தலின்படி, ஒரு வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை 20 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு வழமை போன்று தினமும் வகுப்புகளை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வகுப்பொன்றில் மாணவர்களின் எண்ணிக்கை 21 முதல் 40 இற்கு உட்பட்டதாக இருந்தால் அந்த வகுப்பை இரண்டாகப் பிரிந்து வாரம் ஒரு வகுப்பு என்றபடி நடத்துவதற்கும் ஒரு வகுப்பில் 40இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் மாணவர்கள் காணப்பட்டால் அவ்வகுப்பு மாணவர்களை சமமாக மூன்று பிரிவுகளாகப் பிரித்து வகுப்புக்கள் நடாத்தப்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை பாடசாலைக்கு அழைக்கப்படாத மாணவர்களுக்கு மாற்று கற்றல் முறைகளைப் பயன்படுத்தி தொடர்புடைய பாடங்களை முழுமையாக கற்பித்து நிறைவு செய்வதற்கான அறிவுறுத்தலை வழங்கவும் கல்வி அமைச்சு தவறவில்லை. அத்தோடு கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் வழமை போன்று கடமைக்கு சமுகமளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் இத்தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவுவதன் காரணமாகவே கல்வி அமைச்சு இவ்வாறான வழிகாட்டல் அறிவுறுத்தல்களை வழங்கி இருக்கின்றது. இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய ஏற்பாடாகவே பெற்றோரும் கருதுகின்றனர். ஏனெனில் இத்தொற்று அச்சுறுத்தலில் இருந்து மாணவர்கள் உள்ளிட்ட எல்லா மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் ஊடாக இத்தொற்றின் பரவுதலை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேவேளை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சியடையவோ பாதிக்கப்படவோ இடமளிக்கவும் முடியாது. அதனால் இத்தொற்று கட்டுப்பாட்டு அறிவுறுத்தலின் கீழ் பாடசாலைக்கு அழைக்கப்படாத மாணவர்களுக்கும் மாற்று கற்றல் வழிமுறைகளின் ஊடாக சம்பந்தப்பட்ட பாடங்களைக் கற்பித்து பூர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் ஊடாக பாடசாலைக்கு அழைக்கப்படும் மாணவர்களுக்கும் அழைக்கப்படாத மாணவர்களுக்கும் இடையில் கல்வி கற்றலில் இடைவெளி ஏற்படுவதைப் பெரிதும் தவிர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதேநேரம் இவ்வேற்பாட்டின் பயனாக பாடசாலைக்கு அழைக்கப்படும் மாணவர்களும் அழைக்கப்படாத மாணவர்களும் சமகல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதோடு, மாணவர்கள் மத்தியில் கற்றல் தொடர்பில் ஏற்றத்தாழ்வு தோன்றவும் வழியிருக்காது.

இத்தொற்று பரவுதல் அச்சுறுத்தலைத் தவிர்க்கும் வகையில் இவ்வேற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அதன் ஊடாகவும் உரிய கல்வியைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களும் உச்சபட்ச கவனம் செலுத்தத் தவறக் கூடாது. தற்போதைய சூழலில் தம் பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் அக்கறையோடும் சிரத்தையோடும் ஈடுபடுவது தொடர்பில் பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் எமது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பின்னடைவுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகாத வகையில் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அது நாட்டின் மேம்பாட்டுக்கும் எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்கும் அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

தாதியர், சுகாதார பராமரிப்பு கல்விக்கான நிறுவனம் அமைப்பதற்கு நடவடிக்கை

தேசத்தின் சுகாதாரத்துறை சார்ந்த தாதியர் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு உள்நாட்டு,வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நோக்கில் திறன்கள் அபிவிருத்தி,தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சினால் புதிதாக தாதியர் மற்றும் சுகாதார பராமரிப்புக் கல்வி நிறுவனமொன்று (Institute of Nursing and Health Care Studies) அமைக்கப்படவுள்ளது.

இந்த புதிய நிறுவனம் தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் ஆலோசனைச் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு திறன்கள் அபிவிருத்தி,தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் (NAITA) மேற்பார்வையில் புதிய நிறுவனம் செயற்படவுள்ளது.இந்த நிறுவனத்துக்கான புதிய பயிற்சி வளாகத்தை மாலபே

பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நாட்டிலுள்ள தனியார் வைத்தியசாலைகளுடன் இணைந்து பயிற்சிநெறியின் இறுதியில் தொழில்சார் பயிற்சி பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் காணப்படும் தாதியர் சேவை தொழில்வாய்ப்புகளுக்குப் பொருத்தமான பாடநெறிகளை ஆரம்பித்து பல்வகையிலான பிரிவுகளை உள்ளடக்கிய நிபுணத்துவமிக்க பணியாளர்களை வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கு அனுப்பமுடிகின்றது. சர்வதேச தரம் கொண்ட தாதியர் சேவையின் MVQ6 டிப்ளோமா சான்றிதழ் இந்த புதிய நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளது.

இந்த புதிய நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் ஆலோசனைச் சபையின் அடுத்த செயற்பாடுகள் சம்பந்தமாக இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீதா அரம்பேபொல நீண்ட கலந்துரையாடல் மேற்கொண்டார். விஷேட வைத்திய நிபுணர்களான உபாலி பாணகல, ஹிரான் அமரசேகர, பவன்த கமகே, பேராசிரியர் இந்திக கருணாதிலக உள்ளிட்ட குழுவினரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இளைஞர், யுவதிகளுக்கான தரம் வாய்ந்த பல்துறை தொழிற்பயிற்சிகளை வழங்கி திறன்மிகு பணியாளர்களை உருவாக்கும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீதா அரம்பேபொலவின் வழிகாட்டலில் பல்வேறு திட்டங்களை திறன்கள் அபிவிருத்தி,தொழிறகல்வி மற்றும் ஆராய்ச்சி, புத்தாக்க இராஜாங்க அமைச்சு மேற்கொண்டுள்ளது.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நாட்டுப் பிரஜைகளை உக்ரைனிலிருந்து மீட்பதில் இந்தியாவின் தீவிர கரிசனை

13,300 இற்கு மேற்பட்டோர் இதுவரை பாதுகாப்பாக விமானங்கள் மூலம் மீட்பு

உக்ரைனின் சுமி நகரில் தவித்து வரும் இந்திய மாணவர்களை மீட்பதற்கு தற்காலிக போர் நிறுத்தம் அல்லது சிறப்பு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று ரஷ்யா, உக்ரைன் நாடுகளிடம் இந்தியா வலியுறுத்தி வருகிறது. உக்ரைன்_ ரஷ்யா யுத்தம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. உக்ரைன் யுத்தத்தில் அகப்பட்ட இந்தியப் பிரஜைகளை பாதுகாப்பாக மீட்கும் நடவடிக்கைகயில் இந்தியா தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளது.

உக்ரைனின் மரியுபோல், வோல்னோவாகா நகரங்களில் ரஷ்யா நேற்றுமுன்தினம் தற்காலிக போர்நிறுத்தத்தை அறிவித்தது. இதையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றனர். இருப்பினும் இந்த இருநகரங்களில் மட்டுமே இந்த நடைமுறை அமுலில் இருந்ததால் பிற நகரங்களில் உள்ளவர்கள் பாதுகாப்பாக தப்பிக் கொள்ள முடியாமல் தவித்தனர். மேலும் தொடர் தாக்குதலால் இந்த தற்காலிக போர்நிறுத்தம் எந்த வகையிலும் பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற உதவாது என உக்ரைன் அரசு கூறி இருந்தது. மேலும் ரஷ்யாவின் இந்த நடவடிக்கை இந்தியர்களுக்கும் பெரியளவில் உதவவில்லை.

இந்தியாவினால் 'ஒபரேஷன் கங்கா' நடவடிக்கை மூலம் விமானங்களில் மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வருகின்றனர். இந்திய மக்களை மீட்பதில் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை உலகெங்கும் வாழ்கின்ற இந்தியர்கள் பாராட்டியுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடியின் அரசு இந்த விடயத்தில் தனியான கரிசனையுடன் செயற்படுவதாக இந்திய மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். பெரும்பாலானா நகரங்களில் இருந்து இந்திய மாணவர்கள் மீட்கப்பட்டு விட்டனர். சுமியில் நிலவும் பதற்றத்தால் மாணவர்களை மீட்பதில் அங்கு மாத்திரம் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சுமியில் உள்ள மாணவர்களை மீட்பதில் இந்திய மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், இதுதொடர்பாக ரஷ்யா, உக்ரைன் நாடுகளிடம் பேசியுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் அரசுக்கு உலகெங்கும் வாழும் இந்திய மக்கள் பாராட்டு

"உக்ரைனில் சுமி மற்றும் பிசோச்சினைத் தவிர பிற இடங்களில் அதிகளவில் இந்தியர்கள் இல்லை. கார்கிவ் நகரில் இருந்து அனைவரும் வெளியேறி விட்டனர். 24 மணி நேரத்தில் 15 விமானங்களில் 2900 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மொத்தம் 63 விமானங்களில் 13,300 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். அடுத்த 24 மணிநேரத்தில் 13 விமானங்களில் மீட்பு பணிக்கான திட்டம் உள்ளது" என்று நேற்றுமுன்தினம் அவர் தெரிவித்தார்.

"மாணவர்களை மீட்பதற்கு சிறந்த வழி என்பது போர் நிறுத்தம்தான். இதுதொடர்பாக ரஷ்யா, உக்ரைன் நாடுகளிடம் பேசியுள்ளோம். தற்காலிக போர் நிறுத்தம் அல்லது மாணவர்களை மீட்பதற்கான சிறப்பு ஏற்பாடு செய்து கொடுக்க வலியுறுத்தி வருகிறோம். சுமியில் உள்ள மாணவர்களை கிழக்கு, மேற்கு எல்லை வழியாக மீட்க முடியும். தற்போதைய சூழலில் போக்குவரத்து வசதியை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சுமியில் உள்ள நல்ல விஷயம் என்னவென்றால், மாணவர்கள் அதிக கவனத்துடன் உள்ளனர். ஒரே இடத்தில் ஒன்றாக உள்ளனர். இது மீட்பு நடவடிக்கைக்கு எளிமையாக இருக்கும். மொத்தம் 700 பேர் அங்கு இருக்கலாம். போர்க்களத்தில் மீட்பு குழுவினர் தயாராக உள்ளனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உக்ரைனுக்கான இந்தியத் தூதர் பார்த்தா சத்பதியும் தனது டுவிட்டர் பதிவில், "சுமியில் உள்ள மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதை உறுதி செய்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதில் இருந்து அரசு பின்வாங்காது" எனக் கூறியுள்ளார்.

இதற்கிடையே பிரதமர் நரேந்திர மோடியும், உக்ரைனில் உள்ள இந்தியர்களை மீட்பது தொடர்பாக உயர்மட்ட குழு கூட்டத்தை அடிக்கடி கூட்டி ஆலோசனை நடத்தி வருகிறார். உக்ரைனில் இருந்து அண்டை நாடுகள் வழியாக இந்தியர்களை மீட்க 4 மத்திய அமைச்சர்கள் அங்கு அனுப்பப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. ரஷ்ய_ உக்ரைன் யுத்தத்தைப் பொறுத்தவரை தங்களது நாட்டுப் பிரஜைகளை மீட்பதில் இந்தியாவைப் போன்று வேறு எந்தவொரு நாடுமே இவ்வாறு அதிக அக்கறை மேற்கொள்ளவில்லையென உலக நாடுகளிலுள்ள இந்திய மக்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்திய குடிமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ரஷ்ய இராணுவம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது. மேலும் ரஷ்யாவில் இருந்து தனது சொந்த இராணுவ விமானங்கள் அல்லது இந்திய விமானங்கள் மூலம் அவர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைக்க தயாராக உள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. உக்ரைன் விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்போது கார்கிவ் நகரில் உள்ள இந்திய மாணவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் என்றும், இந்தியர்கள் பத்திரமாக தாயகம் திரும்ப உதவ வேண்டும் என்றும் பிரதமர் மோடி கேட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

விலங்குகளின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவது எவ்வாறு?

யானை மற்றும் ஏனைய விலங்குகளின் தாக்கதிலிருந்து மனிதர்களையும், பயிர்களையும் எவ்வாறு பாதுகாத்தல், பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடுகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளுதல் போன்றன தொடர்பாக கல்முனை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு கிராம நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல். பதியுத்தீன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸ் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் அம்பாறை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள வளத்தாப்பிட்டி காரியாலய நிலைய பொறுப்பதிகாரி ரி.ஜெகதீஸன் கலந்து கொண்டு கருத்துகள் தெரிவித்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில் "காட்டு யானைகள் எமது நாட்டின் சொத்து ஆகும். அதன் மூலம் எமது நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைக்கின்றது. இருந்தாலும் இவற்றின் மூலம் வீடுகளுக்கு, சுற்று மதில்களுக்கு, கட்டடங்களுக்கு சேதம் ஏற்படுவதுடன், மக்களுக்கு காயங்களும் ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன. அத்துடன் பயிர்ச் சேதங்களும் நிகழ்கின்றன.

காயங்கள் ஏற்படும் போது அதற்குரிய வைத்திய அறிக்கையை சமர்ப்பித்து நிதியைப் பெற்றுக் கொள்வதுடன், மரணங்கள் நிகழும் போது உரிய ஆவணங்களை முழுமையாக சமர்ப்பித்து ஐந்து இலட்சம் ரூபா இழப்பீடுகளையும் பெற முடியும்.ஆனால் தேசிய வன சரணாலயம், வன பரிபாலன காடு, தேசிய வனப்பூங்கா போன்ற பகுதிகளில் இடம்பெறும் மரணங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட மாட்டாது. யானைத் தாக்கம் மற்றும் மரணங்கள் ஏற்படும் போது மற்றும் உங்களது கிராம சேவகர் பிரிவுகளில் யானைகள் இறந்து கிடந்தால் உடனடியாக உரிய அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு யானைகள் வருகின்ற நிலையில் அவற்றை விரட்ட சிக்னல் வெடி, எறிவெடிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்ற செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.

பி.எம்.எம்.ஏ.காதர் ...
(மருதமுனை தினகரன் நிருபர்)

கௌரி விரதம்

மாசியும் பங்குனியும் கூடும் வேளையில் நோற்கப்படுவது (விரதம் இருப்பது) காரடையான் நோன்பு ஆகும்.

மாசி மாத கடைசி நாள் இரவு ஆரம்பித்து பங்குனி முதல் நாள் காலையில் முடிப்பர். இந்த நோன்பை காமாட்சி நோன்பு, கௌரி விரதம், சாவித்திரி விரதம் என்றும் சொல்வார்கள் நம் பெரியோர்கள்

சாவித்திரி தன் கணவனை எமதர்ம ராஜனிடமிருந்து மீட்டது இந்த நாளில்தான். சுமங்கலிப் பெண்கள் தங்கள் கழுத்தில் மங்கல நாண் (தாலி பாக்கியம்) நிலைக்கவும்; தங்களது கணவன் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என்பதற்காகவும் சாவித்திரி அம்மனை வேண்டி இந்த விரதம் இருப்பார்கள்.

விரத பூஜையில் காமாட்சி அம்மனையும், கலசத்தையும் வைத்து (கலச பூஜை) வழிபடுவார்கள்.

அம்மனுக்கு கார் அரிசியும் காராமணியும் கலந்து செய்த அடையும், உருகாத வெண்ணெயும் நிவேதனம் செய்வார்கள். நோன்புச் சரட்டில் மலரைக் கட்டி பூஜையில் வைத்து கழுத்தில் கட்டிக் கொள்வார்கள். "மாசிக்கயிறு பாசி படியும்' என்று, பங்குனி முதல் நாளில் புதிய மங்கலச் சரடை மாற்றிக்கொள்வது பெண்களுக்கு விசேஷமானதாகக் கருதப்படுகிறது.

சாவித்திரி விரதத்தின் சிறப்பை புராணம் விளக்குகிறது.

நெடுநாட்கள் பிள்ளைப் பேறு இல்லாமலிருந்த அஸ்வபதி மன்னன், மகப்பேறு வேண்டி தானம் ' தர்மங்கள் , செய்து வந்தான். அதன் பயனாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. சாமுத்திரிகா லட்சணங்கள் அனைத்தும் கொண்டிருந்த அக்குழந்தைக்கு சாவித்திரி என்று பெயரிட்டனர்.

அவளுக்கு எட்டு வயதாகும்போது அங்கு வந்த நாரதர், அவளது எதிர்காலத்தைப் பற்றி கூறிச் சென்றார். தாய் தந்தையரை தெய்வமாக மதிக்கும் சத்யவான் என்பவனை அவள் மணந்து கொள்வாள் என்றும்; சத்யவான் 21 ஆண்டுகள் வரைதான் வாழ்வான் என்றும் கூறியிருந்தார்.

சாவித்திரி சத்யவானையே மணந்து, அவனது வாழ்நாள் அதிகரிக்க பல விரதங்களையும் நோன்புகளையும் அனுஷ்டித்தாள். சத்யவானும் சாவித்திரியும் வேற்று நாட்டு அரசனால் நாடு கடத்தப்பட்டு ஒரு கானகத்தில் வசித்து வந்தனர். நாரதர் கூறியிருந்தபடி சத்யவானின் இறுதிநாள் வந்தது. அன்று சாவித்திரி தடுத்தும் கேளாமல் அவன் விறகு சேகரிக்க காட்டுக்குப் புறப்பட்டான். சாவித்திரியும் உடன் சென்றாள். நண்பகல் வேளையில் சத்யவான் சாவித்திரியின் மடியில் தலைவைத்து படுத்திருந்தபோது, எமதர்ம ராஜன் அவன் உயிரைப் பறித்துச் சென்றான்

சாவித்திரியின் கற்புத் திறத்தால் எமதர்மனின் உருவம் அவள் கண்களுக்குத் தெரிந்தது. அவள் தன் கணவனின் உடலைக் கீழே கிடத்தி விட்டு, எமனைப் பின்பற்றிச் சென்றாள்.

அவளது காலடி ஓசை கேட்டுத் திரும்பிய எமனின் பாதங்களில் விழுந்து சாவித்திரி வணங்கினாள். அவளை "தீர்க்க சுமங்கலி பவ" என்று எமன் வாழ்த்தினான். சாவித்திரி எமனை வேண்டி பல வரங்களைப் பெற்றாள். அதில் வம்சவிருத்தி அருளும்படி வேண்டிய வரம் எமனைத் திகைக்க வைத்தது. சாதுர்யமாக தன் கணவனின் உயிரை அவள் மீட்டதை அறிந்தான் எமன்.

சாவித்திரியின் பதிபக்தியை மெச்சிய எமன், "இதுவரை என்னை யாரும் பார்த்தது இல்லை. உன் கற்பின் மகிமையால் நீ வெற்றி பெற்று விட்டாய். நீ என்னிடம் கேட்டுப் பெற்ற வரங்கள் அனைத்தும் நிறைவேறும். உலகம் உள்ளளவும், உன்னை நினைத்து மாசியும் பங்குனியும் சேரும் சமயத்தில் விரதமிருப்பவர்களுக்கு உன் ஆசி கிட்டும். அவர்கள் மனமொத்த தம்பதிகளாக வாழ்வார்கள்'' என ஆசி கூறி அனுப்பினான்.

சாவித்திரி காட்டில் கணவனை விட்டுச் சென்ற இடத்திற்குத் திரும்பி வந்து, அவன் உடலைத் தன் மடியில் கிடத்தினாள். சிறிது நேரத்தில் தூக்கத்திலிருந்து விழிப்பதுபோல் சத்யவான் விழித்தெழுந்து, "உன்னைப் போன்ற பெண் ஒருத்தி என்னை மீட்டு வந்ததாகக் கனவு கண்டேன்'' என்று கூறினான். அவன் உயிரை எமன் எடுத்துச் சென்றதையும்; எமனுடன் போராடி அவன் உயிரையும், மேலும் பல வரங்களையும் பெற்று வந்த விவரத்தையும் சாவித்திரி கூறினாள்.

சாவித்திரியும் சத்யவானும் தங்கள் குடிலுக்குத் திரும்பி வந்தனர். சாவித்திரி எமனிடம் பெற்ற வரத்தின்படி சத்யவான் மீண்டும் தன் நாட்டைப் பெற்றான். அவனது பெற்றோர்கள் கண்பார்வை பெற்றனர்.

சாவித்திரி அனுஷ்டித்து வந்த நோன்பு அவளது காலம் வரை கௌரி நோன்பு எனக் கூறப்பட்டது. அதன் பின்னர் சாவித்திரி நோன்பு என்ற பெயர் பெற்றது. சாவித்திரி காட்டில் இருந்து இந்த நோன்பை மேற்கொண்டபோது அங்கு அவளுக்குக் கிடைத்த காராமணி, கார் அரிசி ஆகியவற்றைக் கொண்டு காரடை செய்து நிவேதனம் செய்தாள். அதனால் இந்த நோன்பு நோற்கும் பெண்கள் நிவேதனத்தில் காரடை வைத்து, "உருகாத வெண்ணெயும் ஓரடையும் நான் தருவேன்; ஒருக்காலும் என் கணவர் என்னைப் பிரியாதிருக்க வேண்டும்" என வேண்டி நோன்புக் கயிறு கட்டிக் கொள்வார்கள்.

திருமணமான பெண்கள் தங்கள் மாங்கல்ய பாக்கியம் நிலைக்க, கணவரை நோய் நொடியின்றி காக்க இந்த நோன்பு கவசமாக இருக்கிறது. இந்த நோன்பை நோற்பதன் பலனாக சாவித்திரி நூறு பிள்ளைகளுடன் சௌபாக்கிய வசதியாய் பல்லாண்டு காலம் வாழ்ந்தாள் என்பது புராணம்

அவளது சரித்திரத்தை நோன்பு தினத்தில் படிப்பதால் சகல சௌபாக்கியங்களும் பெறலாம் மேலும் நமது குடும்பங்களில் நோயற்ற வாழ்வும் குறைவற்ற அருள் செல்வமும் என்றும் நீக்கமற அருள்பவர் சிவபெருமான் ஒருவரே ஆவார்

ஆகவே நாம் எப்போதும் பரம்பொருளை (சிவபெருமானை) முன் வைத்து செய்யும் எந்த செயலும் வெற்றியடையும் மேலும் எந்நாளுமே இன்பம் ஒருபோதும் நமக்கு துன்பமில்லை சிவபெருமானின் பெருங்கருணை நமக்கு இருக்கும் போது இதை விட நமக்கு வேறு என்ன வேண்டும்.

ஆகவே இந்த காரடையான் நோன்பை நாமும் இருந்து பரம்பொருளிடம் (சிவபெருமானிடம்) திருவருளைப் பெற்று ஆனந்தமாக இந்த வாழ்நாளை கழித்து அவரது திருவடிக்கீழ் பேரானந்தமாக இருக்கும் வரத்தைப் பெறுவோம். எல்லாம் அவன் செயல் சிவன் செயல் ஆகும்.

மானுடவியல் (தொடர்)

கண்ணப்ப நாயனார்

63

இங்கேயும் அந்தச் சுவாமி உண்ணுதற்கு இறைச்சி கொண்டுபோம்பொருட்டு வந்திருக்கிறார். எங்கள் குலசாமியை விட்டுவிட்டார். அந்தச் சுவாமி வசமாய்விட்டார்' என்றான்.

உடனே காடன் "திண்ணரே! நீர் என்ன செய்தீர்? என்ன பைத்தியங்கொண்டீர்" என்று கேட்டார்.

திண்ணனார் அவன் முகத்தைப் பாராமல், பன்றியை நெருப்பிலே வதக்கி; அதினுடைய இனிய தசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்து அம்பிலே கோத்து நெருப்பிலே காய்ச்சி, பதமாக வெந்தவுடனே, சுவைபார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்ல மெல்லப் பலமுறை அதுக்கிப் பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லையிலே வைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார்.

அதைக் கண்ட நாணன் காடன் இருவரும், "இவர் மிகப் பைத்தியங் கொண்டிருக்கின்றார். பெறுதற்கரிய இறைச்சியைக் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி வீணாக உமிழுகின்றார். மற்றையிறைச்சியைப் புறத்திலே எறிந்து விடுகின்றார். தாம் மிகப் பசியுடையராயிருந்தும், தனை உண்கின்றாரில்லை. எங்களுக்குத் தருகின்றாருமில்லை. இவர் தெய்வப் பைத்தியங்கொண்டுக்கின்றார். இதனைத் தீர்க்கத்தக்க வழி ஒன்றையும் அறியோம். தேவராட்டியையும் நாகனையும் அழைத்துக் கொண்டுவந்து இதைத் தீர்க்கவேண்டும். வேட்டைக்காட்டிலே நிற்கின்ற ஏவலாளரையும் கொண்டு நாங்கள் போவோம்" என்று சொல்லிக் கொண்டு போனார்கள். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

வருடாந்த வேள்வி விழா

புத்தளம் மாவட்டம் வட்டவான் ஸ்ரீவடபத்திர காளியம்மன் ஆலய வருடார்ந்த வேள்வி விழா 02.03.2022 அன்று கும்பம் வைத்தலுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விசேட பூசைகளும் நடைபெற்று 7ம் நாளில் அம்பாள் பவனி வருதலும் நடபெறும். 8ம்நாளில் அக்கினிச் சட்டி எடுத்தல், பிச்சைக் கரகம் உடப்பு வரை செல்லலும், 9ம் நாளில் வட்டவானில் பிச்சைக் கரகம் நடைபெற்று அம்பாள பவனியும் நடைபெறும். 10.03.2022 ,10ம் நாளில் மஞ்சல், பால் நீராடல், விசேட பூசை அன்னதானம் கும்பம் சொறிதலும் நடைபெறும். 12.03.2022 அன்று வைரவர் விசேட அபிசேக பூசையும் நடைபெறும்.

கலாவிபூஷணம், சிவத்திரு
பா.முருகானந்தன்...
உடப்பு.

அறநெறி அறிவுநோடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

18906) புல் இனத்திலேயே முதன் முதலில் தோன்றிய புல் இனம் எது?
அறுகம்புல்.

18907) இது எவ்வாறான வேர்களைக் கொண்டிருக்கும்?
உறுதியான வேர்களைக் கொண்டிருக்கும்

18908) இது உறுதியான வேர்களைக் கொண்டிருப்பதால் புல்லை பிடித்திழுத்தால் என்ன நடக்கும்?
மேல்பாதி அறுபட்டு புல் மட்டும் கையில் வரும்.

18909) வேருக்கு என்ன நடக்கும்?
வேர் மட்டும் பூமியில் தங்கி மீண்டும் முளைக்கும்.

18910) அறுபட்டு மீண்டும் உடனே தழைத்து நிற்பதால் இதற்கு ஏற்பட்ட பெயர் என்ன?
'அறுகம்புல்'

18911) அறுகம்புல்லிற்குரிய மூலிகைப் பெயர்கள் என்ன? மூதண்டம், தூர்வை, அறுகு, பதம், மேகாரி

18912) அறுகம்புல் எவ்வாறான மண் வளத்தில் வளரும்?
எல்லாவித மண்வளத்திலும் வளரும்.

18913) அறுகம்புல் எப்படிப்பட்டதாக இருக்கும்?
குறுகலான நீண்ட இலைகளையும், நேராய் வளரும் தண்டுகளையும் உடையது.

18914) இது எப்படி வளரும்? தன்னிச்சையாய் வளரும்

18915) இது எங்கே வளரும்?
வயல் வரப்புகளிலும் வெட்ட வெளிகளிலும் வளரும்.

18916) இது ஏன் மூலம் இன விருத்தி செய்யப்படுகிறது?
சல்லிவேர் முடுச்சுக்கள் மூலமும், விதைகளின் மூலமும் இன விருத்தி செய்யப்படுகிறது.

18917) முன்னொரு காலத்தில் தேவர்களையும், ரிஷிகளையும் மிகவும் துன்புறுத்தி வந்த அரக்கன் யார்?
அனலாசுரன்

18918) இந்த அரக்கன் இவ்வாறு துன்புறுத்தியதோடு வேறு என்ன செய்தான்?
யாகங்களுக்கும், நற்காரியங்களுக்கும் இடையூறாக இருந்து வந்தான்.

18919) அவன் எதிரிகளை அறுகில் வரவிடாமல் தடுக்க என்ன செய்தான்?
வாயிலிருந்து அக்கினியை உமிழ்ந்து செய்வான்,.

18920) யாரால் இவனை போரிட்டு வெல்ல முடியாமல் போனது?
இந்திரனால்

18921) அவனை போரிட்டு வெல்ல முடியாததால் இந்திரன் என்ன செய்தான்?
வேறு வழியின்றி தேவர்கள் புடைசூழ கைலாயம் சென்று விநாயகப் பெருமானிடம் அனலாசுரனை வதம் செய்து தங்களைக் காக்க வேண்டுமென்று முறையிட்டான்.

18922) அவர்களது வேண்டுகோளை ஏற்ற விநாயகப்பெருமான் என்ன செய்தார்?
அனலாசுரனுடன் போரிட்டு கடைசியில் அவனை எடுத்து அப்படியே விழுங்கிவிட்டார்.

முந்தல் ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை ஆதரவில் மஹா சிவராத்திரி தின கலை கலாசார நிகழ்வுகள் (2)திகதி இரவு முந்தல் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதன் போது அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (படம்:உடப்பு குறூப் நிருபர்)

மாசி மாத மகா சிவராத்திரி நிகழ்வை முன்னிட்டு கண்டி பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில ஆறு சாமப் பூசைகளும் கலை நிகழ்ச்சிகளும் வெகு விமரிசையாக இடம்பெற்றன.
(படம்: புசல்லாவை தினகரன் நிருபர்)

நாதப் பிரம்ம யோகம் - 09

ஸ்வரங்களை ஒரு ஒழுங்கில் கட்டமைப்பது இசைக்கு உயர்வினைத் தரும். ஸ்வரங்களை உயர்த்தி தாழ்த்தி நாதத்தினை உருவாக்காமல் இசையினை உருவாக்க முடியாது. இசையின் தோற்றம் என்பதே நாதத்தின் வேறுபாடே, இந்த எல்லையற்ற மூல நாதசக்தி தொடர்ச்சியாக அதிர்ந்து இசை தொடர்ச்சியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பறவைகளின் இசை எப்படி இயற்கையில் வெளிப்படுகிறதோ அப்படி இயற்கை எங்கும் நாதம் இசையாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த இயற்கையில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நாத சக்தியினையே சாஸ்திரங்கள் நாதப் பிரம்மம் என்று கூறுகின்றன. இசை மாத்திரமே எல்லாப் பொருட்களிலும் பிராணனை செலுத்தும் வல்லமையுள்ளது.

அதனால் இசையினை அனைத்து மன, உடல் வியாதிகளுக்கும் சிகிச்சையாக பயன்படுத்தமுடியும். இன்றைய சமூகத்தின் உண்மையான இசையினை சாஸ்திரீய சங்கீதத்தினை காண்பது அரிதாகி விட்ட து. செயற்கையான தாளக்கட்டினை உட்புகுத்தி ராக், பொப் போன்ற இசை வடிவங்கள் இந்திய இசையில் கலப்படம் செய்யப்படுகின்றன. இசை என்ற பெயரில் பலவிதமான இரைச்சல்களைப் புகுத்தி அதன் உண்மையான தெய்வீக வடிவம் அற்றுப் போகச் செய்கிறார்கள்.

பாரம்பரிய இசையில் தூய முறையில் தேர்ச்சி பெற்ற ஆசியுடைய விழிப்படைந்த ஆன்மாக்கள் இயற்கையில் ஜடத்திற்கும், சைதன்யத்திற்கும் இடையில் உள்ள தொடர்பினை விளக்கி இசையின் இந்த உயர்ந்த தன்மையினை பாமரர்களும் புரிந்து கொள்ள முன் வரவேண்டும்.

வாய்ப்பாட்டின் முக்கிய அமிசம் லயம், தாளம் ஆகிய இரண்டுமாகும். இந்த இரண்டும் வாய்ப்பாட்டின் மூலம் பிராணன் நுண்மையாக பிரவாகிப்பதற்கு அவசியமான ஒன்றாகும். இசையினை தகுந்த வாய்ப்பாட்டின் மூலமாகவோ இசைக் கருவிகளூடாகவோ தகுந்த ஒழுங்குபடுத்தப்பட்ட ஸ்வரங்களை அமைப்பதன் மூலம் உருவாக்க முடியும். வாய்ப்பாட்டும், இசைக்கருவிகளும் ஒன்றை ஒன்று அழகுபடுத்தி இசையினைத் தருவன. இப்படி உருவாக்கப்படும் இசையுடன் இசைக் கலைஞரின், பாடகரின் உணர்ச்சியும் கலக்கப்படுமாக இருந்தால் அது மிகப் பெரிய மின்சாரமாக செயற்பட்டு கேட்பவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தினை, உணர்ச்சி மாற்றத்தினை ஏற்படுத்தும்.

எல்லா விதமான உணர்ச்சிகளும் காமம், உத்வேகம், பக்தி, இத்தகைய உணர்ச்சிகள் அனைத்தும் கேட்பவர்களுக்கு இலகுவாக இசை மூலம் உருவாக்க முடியும். தூய, இயற்கையுடன் இயைந்த, பக்தி இசை ஒருவனை தாழ்மையான உணர்ச்சிகளிலிருந்து தெய்வீகத் தன்மை உடையவனாக ஆக்கும். காம,மனதிற்கு துள்ளல் குதிப்பு, செயற்கையான இசைகள் மறுதலையாக ஒருவனது உணர்வினை தாழ் உணர்ச்சிகளுக்கு கொண்டுசெல்லும்.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

கொழும்பு வெள்ளவத்தை மக்கள் குறை தீர்க்கும் கங்காதீஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று பக்தர்கள் தங்களின் கரங்களால் சிவனுக்கு பாலாபிஷேகம் செய்வதையும், ஆலயத்தின் ஸ்தாபகரும் பொறுப்பாளருமான சாமி கங்காதரன் பூஜைகள் நடத்துவதையும் படங்களில் காணலாம். (படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

தந்தை செல்வா நற்பணி மன்றம், மத்திய கொழும்பு இந்து வித்தியாலயத்தில் நடத்தி வரும் சிவராத்திரி விழா அண்மையில் நடைபெற்றது. இம்மன்ற அறநெறி பாடசாலையின் 25ஆவது ஆண்டு நிகழ்வாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் கொழும்பு நகர சபை உறுப்பினர் புஷ்பரட்னம் சுதர்ஷன், வித்தியாலய அதிபர் பத்மரஞ்சன், டொக்டர் ராமஜெயம், லயன் ரவீந்திரன், லயன் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்புகளும் பாராட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. (படங்கள்: கொழும்பு மத்திய நிருபர்)

மேலுமொரு கடுகதி...

5 மணிக்கு கொழும்பை வந்தடையும். இந்த புகையிரதத்தில் 530 பேர் வரை பயணிக்க முடியும் என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

தங்கத்தின் விலை...

தங்கத்தின் விலை தற்போது 1,970 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை விரைவில் 2,000 டொலரை தாண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சட்ட விரோத சொத்து ...

அதிக பெறுமதியுடைய சட்ட விரோத சொத்துக்கள் தடை செய்யப்பட்டுள்ளதோடு, சட்ட விரோத பணபரிமாற்ற சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி என்பதாக ...

நாடு முழுவதும் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அதற்காக அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி அனைத்து அரச ஊழியர்களும் உழைக்க வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

எரிபொருள் நெருக்கடிக்கு...

எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்த அமைச்சர்,

எவ்வாறாயினும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்தோடு பொதுமக்கள் நேற்றும் (ஞாயிற்றுக்கிழமை) எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருப்பதைக் காணமுடிந்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாட்டால் மூன்று ...

உள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்தது.

மேற்படி மூன்று கப்பல்களும் கடந்த முதலாம் திகதியிலிருந்து ஆறு தினங்களாக துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட நிலையில் ஒவ்வொரு கப்பலுக்கும் நாளாந்தம் 15,000 அமெரிக்கன் டொலர் தாமதத்திற்கான கட்டணம் வழங்க நேரிட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு செலுத்தவேண்டிய டொலர் இதுவரை கிடைக்கவில்லை.நாளாந்தம் சுமார் 80,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வந்தன. அந்த நிலையில் கடந்த ஆறு தினங்களாக எந்தவொரு எரிவாயு சிலிண்டரும் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை. இதனால் மீண்டும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் உருவாகியுள்ளது என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, அதுதொடர்பில் லாப் காஸ் நிறுவனம் தெரிவிக்கையில், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்தும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளதாகவும் தற்போதைக்கு கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ள நிலையில் சந்தையில் லாப் காஸுக்கு பெரும் தட்டுப்பாடு நிலைவுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஸ)

முதுபெரும் நடிகர் பேர்ட்டி குணதிலக...

அவர் பல சிங்கள திரைப்படங்களிலும் இலங்கையில் பல தொலைக்காட்சி நகைச்சுவை நிகழ்ச்சிகளிலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூன்று மாதங்களுக்குள்...

ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன மேலும் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு கடன்...

அத்துடன் வட்டி வீதமும் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறிக்காக செலுத்தவேண்டிய வட்டி வீதமும் மேலும் 400 பில்லியனால் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டியதை வலியுறுத்தியுள்ள அவர், சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களிடமிருந்து பொருளாதார ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவேண்டுமானால்கையிருப்பு வீதத்தை சுயாதீனமாக தீர்மானிப்பது, வரிகளை அதிகரிப்பது, ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை இல்லாதொழிப்பது போன்ற நிபந்தனைகளுக்கு உட்படவேண்டி நேரும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ)

பூஸ்டர் தடுப்பூசியை துரிதமாக...

தடுப்பூசியை பெற்று முழுமையான தடுப்பூசியை பெற்ற அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நேற்றைய நாளில் 30, 381 பேருக்கு, பைஃஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்பட்டதாக, தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, 73 இலட்சத்து 6, 152ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம், நேற்றைய தினம் 2, 593 பேருக்கு பைஃஸர் முதலாம் தடுப்பூசியும், 6,281 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 786 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும், 2,071 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாகன விபத்தில்...

வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தையும் மகனும் பலியாகினர். மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸொன்று, குறுக்கு வீதியொன்றிலிருந்து இருந்து பிரதான வீதி நுழைந்த முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முச்சக்கர வண்டியில் பயணித்த தந்தை சம்பவ இடத்திலேயே மரணித்ததுடன் காயமடைந்த மகன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மரணித்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பகுதியில் ஒன்றுதிரண்ட மக்கள் பஸ்ஸை தாக்கிச் சேதப்படுத்தியதையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் 46 வயதான தந்தையும் 14 வயதான மகனுமே மரணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்தில்...

நிலமை தொடர்பில் விரைவில் தீர்மானிக்குமாறும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தேவையான இழப்பீடுகளை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில ஏற்பாடுகளைத் திருத்தியமைப்பதற்கும் அந்தச் சட்டத்தின் கீழ் பல கைதிகளை விடுதலை செய்வதற்கும் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் மீண்டும் ஏற்டாமல் தவிர்ப்பதற்குத் தேவையான ஆழமான சட்ட, நிறுவன மற்றும் பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்ட வேண்டும். எனினும், கடந்த வருடம் பொறுப்புக்கூறும் செயற்பாட்டில் தொடர்ந்தும் பின்னடைவைக் காண முடிந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரினதும் மனித உரிமைகளுக்காக அரசாங்கம் குரல் கொடுக்க வேண்டும்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நம்பத் தகுந்த வழிவகைகளை அரசாங்கம் இன்னமும் முன்வைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுக்கான இழப்பீடு அதேபோல் தாக்குதல்களின் தன்மை, பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு என்பன பற்றிய விரிவான அறிக்கையொன்றை அவர் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதியுடன் SLFP....

வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சந்திப்பு இன்று பிற்பகல் நான்கு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 14 பேர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 15 விடயங்களை உள்ளடக்கிய யோசனைகளை அண்மையில் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருந்தது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற விசேட பேச்சுவார்த்தையொன்று பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளமை தொடர்பிலும் அந்த சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டிரான் அலஸ், அதுரலிய ரதனதேரர் உள்ளிட்ட பலரும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

அரசாங்க பாடசாலைகள் இன்று...

காரணமாக பெருமளவு மாணவர்களை கொண்ட வகுப்புக்களை இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய ஆலோசனைகளை பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க, கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் மீளாய்வு ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கான தீர்மானம் விரைவில் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் வகுப்பொன்றில் 20 மாணவர்களுக்கு குறைவானவர்கள் இருப்பார்களானால் வாரத்தில் ஐந்து நாட்களும் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். 21 , 40 வரையிலான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ள வகுப்புக்களில் மாணவர்கள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒன்றுவிட்டு ஒரு வாரம் அவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 40 க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களில் மூன்று பிரிவுகளாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைமையிலேயே இன்றுமுதல் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் நடைபெறுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலை கல்வி கட்டமைப்பிலும் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதாக இலங்கை ஆசிரியர்கள் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் போதுமான டீசலை பெற்றுக்கொடுக்காதவிடத்து பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவையை இடைநிறுத்தப் போவதாக பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் எல்.எல். ஸ்ரீ டி சில்வா தெரிவிக்கையில், இ.போ.ச. டிப்போ மூலமாக தமக்கு எரிபொருளை பெற்றுத்தருமாறு முன்வைக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லையென அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

ஆளும் தரப்பு ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம்;....

ஆகியோருக்கு நான்காவது வரிசையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நாளை 8ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வின் போது இந்த ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்படுகிறது.

விமல் வீரவங்ச கைத்தொழில் அமைச்சராக பணியாற்றிய போது அவருக்கு முன்வரிசை ஆசனமும் உதய கம்மம்பிலவுக்கு இரண்டாம் வரிசையில் ஆசனமும் ஒதுக்கப்பட்டிருந்தது. எஸ்.பி.திசானாக்கவுக்கு 4 ஆவது வரிசையில் முன்னர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை ராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து கெபினர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திலும் அமுனுகமவுக்கு 2 ஆம் வரிசையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அருந்திக்க பெர்ணாந்துவுக்கும் 2 ஆம் வரிசையில் ஆசன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டனர்.இதனையடுத்து அவர்களது சிரேஷ்டத்துவம் அடிப்படையில் பாராளுமன்றில் ஆசனங்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.ஏனைய சில அமைச்சுப்பதவிகளில் மாற்றம் செய்யப்பட்டாலும் அவர்களின் ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்படவில்லை என அறியவருகிறது.

பாராளுமன்றம் நாளை முதல் 4 தினங்கள் கூட உள்ளது. 08ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவிருப்பதுடன், மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணிவரை புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், மார்ச் 09ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணி வரை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மார்ச் 10ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பி.ப 12.30 மணி வரை வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் பின்னர் மதிய போசன இடைவேளை இன்றி பி.ப 12.30 முதல் பி.ப 5.30 மணிவரை நாட்டில் நிலவும் எரிசக்திப் பிரச்சினை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு நேரம் ஒதுக்குவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், மார்ச் 11ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனி நபர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. (பா)

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் "வினைத்திறனாளிகள் கௌரவிப்பு 2021 " அண்மையில் பத்தரமுல்லை அப்பே கம வளாகத்தில் நடைபெற்றது. தேயிலை பயிரிடப்படுகின்ற 10 மாவட்டங்களிடையே மாத்தறை மாவட்டம் முதலிடத்தைச் சுவீகரித்துக் கொண்டது. கனங்கே தேயிலைப் பரிசோதகர் எம். மிஃப்ராஹ் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

எதிரணியின் நாட்டை குழப்பும்... 03ஆம் பக்க தொடர்...

கோட்டாபய ராஜபக்ஷ இந்த கோவிட் தொற்றுநோயை மிகவும் சாதுரியமாகவும் புத்திசாலித்தனமாகவும் கையாண்டார்.

இன்று நமக்கு சவால்கள் உள்ளன. எண்ணெய் பிரச்சினை வந்தது. எரிவாயு பிரச்சினை வந்தது. இன்று நாட்டில் இந்த பிரச்சினைகள் உள்ளன. அமைச்சரவையில் உள்ளவர்கள் எண்ணெய் தீர்ந்து விட்டது என்ற நிலையில் மக்கள் எரிபொருள் வாங்குவதற்கு வரிசையில் நிற்க ஆரம்பித்தார்கள். வாகனங்கள் வரிசையில் நின்றன.

பிரேமதாசவும் அநுர திஸாநாயக்கவும் தான் நாட்டில் குழப்பம் ஏற்படுத்த விரும்பினர். எந்த அமைச்சராக இருந்தாலும் சரி, ராஜாங்க அமைச்சராக இருந்தாலும் சரி, அவர் ஆட்சிக்கு வருவதற்கு முன் எதிர்க்கட்சியில் இருந்து செய்தவற்றை தான் ஆளும் தரப்பிற்கு வந்தபிறகும் செய்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ யாராவது ஆட்சியைக் கவிழ்க்க முயல்வதாக இருந்தால் அதனால் பேரிழப்பு ஏற்படும். எனவே, விருப்பம் இல்லாத நிலையிலும் எமது அமைச்சர்கள் இருவரை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானங்களை எமது ஜனாதிபதி எடுக்க வேண்டியிருந்தது. இப்போது நிதியமைச்சரைத் தாக்குகிறார்கள். இதைப் பார்க்கும் போது எதிர்க்கட்சியின் பணியை அரசாங்கத்திற்குள் இருந்து செய்வதாக தோன்றுகிறது. எனவே, மஹிந்த ராஜபக்சவின் கொள்கையையே எமது ஜனாதிபதியும் பின்பற்றுகின்றார். சலூன் கதவு திறந்தே உள்ளது. நீங்கள் வரலாம் ,போகலாம்.

இன்று நிதி அமைச்சருடன் உரையாடினேன். தேவையான எண்ணெயை ஏற்கனவே இறக்குமதி செய்துள்ளோம். நம் நாட்டில் இப்போது எண்ணெய் பிரச்சினை கிடையாது . நாளை விடுமுறை என்றாலும் எண்ணெய் விநியோகம் வழக்கம் போல் நடைபெறும். மக்கள் பீதியடைய வேண்டாம் என்று நான் பொறுப்புடன் சொல்கிறேன். மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்க வேண்டாம் நமக்கு தேவையான எண்ணெய் கையிருப்பில் உள்ளது. மீண்டும் ஒருமுறை இந்த நாட்டு மக்கள் எண்ணெயால் பிரச்சினைகளை சந்திக்க இடமளிக்க மாட்டோம் என்றார். (பா)

16 எம்.பிக்கள்... 03ஆம் பக்க தொடர்...

அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மேற்படி 11 கட்சிகளினதும் தலைவர்களின் கையொப்பத்துடன் ஒன்றிணைந்த அறிக்கையொன்றை வளியிடுவதற்கு அந்த கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் சரியான பாதையில் நாடு என்ற தொனிப்பொருளில் அண்மையில் வளியிடப்பட்டுள்ள யோசனைகளை பௌத்த மத மகாநாயக்க தேரர்களுக்கும் ஏனைய மதத் தலைவர்களுக்கும் கையளிக்கவும் அதனை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

போக்குவரத்து விதிகளை... 03ஆம் பக்க தொடர்...

வாகன திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் இணைந்து குற்றவாளிகளின் வீட்டிற்கு விரைவில் அபராத பட்டியலை அனுப்பி வைக்க வுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (பா)

முஸ்லிம் மீடியா போரத்தின்... 03ஆம் பக்க தொடர்...

கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதம் கிடைக்காதவர்கள் சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளரின் 077 311 25 61 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தமிழர் பிரச்சினையை தீர்க்கும்... 03ஆம் பக்க தொடர்...

இனப்பிரச்சினை. அதனை எத்தனையோ விதமாக தீர்க்கலாம். இரகசியமாக தீர்க்கவேண்டியதை ஒருவரும் சிந்தித்து பார்க்கவில்லை. எங்களுடைய தலைவர்களின் கோரிக்கையை இந்தியா அரசாங்கம் தலையிட்டு இன்ன இன்ன பிரச்சினைக்கு இன்ன தீர்வுதர வேண்டும் என இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தி தீர்வை கோரி அதனை இந்திய அரசாங்கம் தீர்வு காண முன்வருமாக இருந்தால் இங்கே எதிர்ப்புதான் கூடிக் கொண்டுபோகுமே தவிர ஆதரவு கிடைக்காது.

ஆகவே நாங்கள் சிந்திக்காதளவுக்கு சிந்திக்கின்றவர்கள் இருக்கின்றனர். எனவே உள்நாட்டில் இந்த பிரச்சினையை தீர்க்கவேண்டும் ஒரு நாட்டின் உதவி கேட்கின்ற போது சம்பந்தப்பட்ட நாடு இலகுவாக சம்மதிக்குமா? என சிந்திக்கவேண்டும். எனவே இதற்கு முக்கிய காரணம் இவர்களுக்கு இராஜதந்திரம் தெரியவில்லை.

இவர்கள் என்ன என்ன கேட்கின்றார்களே அதே விஷயங்களை நான் கேட்டிருக்கின்றேன். சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள கூடிய தீர்வை நான் முன்வைத்தவன். அது இந்திய ஆட்சி முறையை தான். எனவே இந்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட அதிகாரத்துக்கு உட்பட்டதற்கு மேலாக கடுகளவும் கேட்கமுடியாது அவர்களும் தரமாட்டார்கள்.

200 மெ.வோ அவசர... 03ஆம் பக்க தொடர்...

செலுத்தி அதன் மூலம் மின்சார சபைக்கு பாரிய நிதி இழப்பை சந்திக்க நேரிடும்.

நீர் மின் நிலையங்களின் ஊடான உற்பத்தி குறைந்து வருவதால் 7 மணி நேர மின்வெட்டு நீடிக்க நேரிடலாம் என்பதால் தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் வாங்குவதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அவசர மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நிராகரிக்கப்பட்டது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, போட்டி விலையில் தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், திட்டமிட்டபடி பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படாமையால் 2024 ஆம் ஆண்டு வரை மின் உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சீமெந்து... 03ஆம் பக்க தொடர்...

நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டதோடு இதற்கு நூறுமில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் கூடுதல் தொகை செலவிடப்பட்டுள்ளது. இந்ததொழிற்சாலை நிர்மாணிப்பு மற்றும் பொருள் உற்பத்தி செயற்பாடுகளுக்கு உலகின் தற்பொழுதுள்ள அதிநவீனதொழிநுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் விசேடஅம்சம் தொழிநுட்ப செயற்பாடுகள் அதிநவீன தன்னியக்கத்தில் செயற்படக் கூடியவகையில் நிர்மாணிக்கபட்டுள்ளதாகும்.

இதன் செயற்பாடுகளை கைத்தொலி பேசியினூடாகவும் செயற்படுத்தவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலையிலிருந்து வருடத்திற்கு76 மில்லியன் சீமெந்து பக்கட்டுக்கள் உற்பத்திசெய்யப்படவுள்ளது. ஹம்பாந்தோட்டை மாகம்புரமஹிந்த ராஜபக்ஸ சர்வதேச துறைமுகத்திலிருந்து மூலப் பொருட்களை இலகுவாக தொழிற்சாலைக்கு கொண்டுவருவதற்கு ஏற்ற விதத்தில் 2.1 கிலோமீற்றர் தூரத்திற்கு டொன் 1200 வேகத்தில் இலங்கையில் இது வரை எந்த தொழிற்சாலையிலும் காணப்படாத கொண்வேயர்பெல்ட் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒருமணித்தியலாத்தில் 200 சீமெந்து பக்கட்டுக்களை உற்பத்திசெய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்பொழுது சீமெந்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இந்தசெயற்பாட்டினூடாக இதுவரை எமதுநாட்டில் உற்பத்தி செய்யப்படும் 65 வீதம் தொடக்கம் 75 வீதமான உற்பத்தி எதிர்காலத்தில் எமதுநாட்டின் மொத்த சீமெந்திதேவையினையும் நிறைவு செய்யக் கூடியதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லொறி – ஆட்டோ நேருக்கு... 03ஆம் பக்க தொடர்...

27 வயதான முச்சக்கர வண்டி டியை ஓட்டிச் சென்ற இளைஞனும் இதில் பயணித்த கடுவெல பிரதேச த்தை சேர்ந்த 28 வயதான இவரது நண்பரும் இவ்விபத்தில் பலியாகி யுள்ளனர். முச்சக்கர வண்டிச் சாரதியின் அலட் சியமான வாகன ஒட்டமே இவ்விபத் து ஏற்படக் காரணம் என ஆரம்ப வி சாரணைகளில் இருந்து தெரியவந் துள்ளது. லொரிச்சாரதி பொலிஸாரா ல் கைது செய்யப்பட்டுள்ளார். லொறி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப் படுள்ளது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னையில் முக்கிய விழா

சாதிக்கும் பெண்களைக் கொண்டாட வேண்டும் என்ற உயரிய நோக்கில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வதேச அளவில் பல் துறைகளில் சாதிக்கு பெண்களைத் தேர்வு செய்து சாதனைப் பெண் என்ற விருது வழங்கி கௌரவப்படுத்தி வருகிறது தமிழ் நாடு திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன். கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா மார்ச் 12 ஆம் திகதி சென்னையில் விஜய் பார்க் உணவகத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

இவ்விழாவில் தமிழகம் மட்டுமல்லாமல் பெங்களூர், ஹைதராபாத், மலேசியா, கனடா, மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் சாதித்து வரும் பெண்களை தேர்வு செய்து விருது வழங்கப்படவுள்ளது.

விருது வழங்கும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், ச கனடா உதயன், வார இதழ் பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், காவல்துறை உதவி ஆய்வாளர் எஸ்.ராஜா ஆகியோர் கலந்துகொள்ள இருப்பதாக நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சுகாதார தகவல்களை கணனி மயப்படுத்தி முகாமைத்துவம் செய்யும்திட்டம் ஆரம்பம்

சுகாதார தகவல்களை கணனி மயப்படுத்தலும் முகாமைத்துவம் செய்தலும் எனும் வேலைத்திட்டம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம் ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை சுகாதார தகவல்கள் பணிப்பாளர் வைத்தியர் பாலித கருணபேம கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். வைத்தியசாலை நோயாளிகளை பார்வையிடல், மருந்து விநியோகம், இரத்த பரிசோதனைகள், கதிரியக்க பரிசோதனைகள் என அனைத்து தகவல்களையும் கணனி மயப்படுத்தப்பட்டு மிக குறுகிய நேரத்திற்குள் சேவை வழங்குவதே இதன் நோக்கமாகும் என வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம் ஹனிபா தெரிவித்தார். நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர். எம். தௌபீக், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவன (ICTA) தலைவர் எம்.ஆர் ஒஸ்கட சேனாநாயக்க, விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு நகரை அண்டிய பிரதேசங்களை கண்காணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சீசீரீவி பிரிவிற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் விஜயம் செய்து பார்வையிட்ட போது...

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122 **மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

SG YX-7299 Bajaj 2012 threewheel கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ. பே. 0711 210810. 016757

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

128 **டயர்கள், டியூப்புகள்** விற்பனைக்கு

டயர் டியூப் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் போக்குவரத்து. போர்க்லிப்ட் உரிமையாளர்களே உங்களுக்குத் தேவையான டயர்கள் ஒரே கூரையின் கீழ் அழையுங்கள் நீங்கள் எதிர்பார்க்காத விலைகளில் கழிவுகள் விலை குறைவு மோட்டர் கிரேடர் நிரப்பப்பட்ட மற்றும் புதிய JCB பெக்கோ டயர் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட லொறி, டிப்பர், டயர் துருக்கி, சீன, மலேசிய டயர் டியூப். நாம் தரு விப்போம். கூடுதல் விலையை ஏன் செலுத்த வேண்டும். 155, கிரவுன் டயர், கொழும்பு14. 0773134060, 0753134060, 0777830000 சுகதாச நீச்சல் தடாக பிரதான கதவு பிரதான பாதை, கல் மற்றும் காற்று டயர் போர்க்லிப்ட் 600 x 9 - 700 x 12, 650 x 10, 28 x 9, 15 - 300 x 15, 250 x 15 016091

வேலைவாய்ப்பு

320 **வெற்றிடங்கள்** ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு 05, ஹெவ்லொக் ரோட் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016122

காணி/தோட்டம்

641 வீடு சொத்து **கொழும்பு** மாவட்டம் விற்பனைக்கு

முகத்துவாரம் அளுத்மாவத்த, கொழும்பு 15, 178, 155 பஸ் பாதையில் வீடு வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை 50,000. 0773965117 015817

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2022 மார்ச் 09ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 60,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09122F109	LKA18222I092	LKA36423C105	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	20,000	20,000	20,000	60,000

ஏல விற்பனைத் திகதி : 2022 மார்ச் 09
தீர்ப்பனவுத் திகதி : 2022 மார்ச் 11
வழங்கப்படும் திகதி : 2022 மார்ச் 11
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மார்ச் 09 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✱ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

பெறுகை அறிவித்தல்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு - மேல் மாகாணம்)

மோட்டார் கார்கள், குரூகெப் வண்டிகள், டபள் கெப் மற்றும் வேன் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத் தேவையான பின்வரும் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

விலைமனு இலக்கம்	விபரம்	விலைமனுப்படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த)	விலைமனுப் பிணைத் தொகை காசாக ரூபா
PRDA/WP/PRO/2022/13	மோட்டார் கார்கள் குரூகெப், டபள் கெப் மற்றும் வேன்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்	ரூபா 1000.00 (பெசேவ இன்றி)	10,000.00

02. 2022.03.07 முதல் 2022.03.18 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ் அதிகார சபையின் பெறுகைப்பிரிவில் இதற்கான விலைமனுப்படிவத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான பிணையத்தை காசாக அல்லது வங்கி வரைவு ஒன்றின் மூலம் பெறுகை நிபந்தனைகளிற்கு அமைவாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2022.03.21 அன்று பி.ப. 2.45 இற்கு முடிவுறுவதுடன் விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் அதே நேரத்தில் இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),
இல. 59, சென். செபஸ்தியன் மேடு,
கொழும்பு -12.
தொ. பே. இல. 011-5676903

NSB National Savings Bank

விலைமனுக்களுக்கான அழைப்பு

கேள்வி இல: NSB/PT/ITE/2022/07

தேசிய சேமிப்பு வங்கிக்கு 25 எண்ணிக்கையான பணத்தாள் மீள்சுழற்சி இயந்திரங்களை (CASH RECYCLING MACHINES) வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

பணத்தாள் மீள்சுழற்சி இயந்திரங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

பெறுகையின் விளக்கம்	பணத்தாள் மீள்சுழற்சி இயந்திரங்கள் - 25
பெறுகை முறை	தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB)
தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்	ரூபா 15,000.00
சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி	ரூபா 750,000.00
விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்	2022-03-29 பி.ப. 3.00 மணி
கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்	2022-03-30 மு.ப. 10.00 மணி

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-03-07ஆம் திகதியிலிருந்து 2022-03-29ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடம் (வழங்கல்) பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,
தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு-03.

திகதி 04.03.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் : 4696 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,952,970.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 6 0 5 2 8 5 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 52,177,937.20
கொவிசெத Govisetha சீட்டிழுப்பு இலக்கம் : 2991 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,401,380.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 14 31 50 79 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,172,142.00
மேல் மாகாண மெகா பவர் 23+ சீட்டிழுப்பு இலக்கம் 1044 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,988,020.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 239,229,186.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 16 வெற்றி இலக்கங்கள் 25 27 58 66
தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் : 726 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,131,760.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 11 33 62 67 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,641,086.40
NLB ஹந்தஹன ராசி சுப பலன் சீட்டிழுப்பு இலக்கம் : 0037 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,388,820.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 07 41 57 59 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,651,205.00
ஜாதிக லொதரஸி மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேவானிய N.W.L. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

திகதி 05.03.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் : 4697 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,135,450.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 7 3 9 5 8 5 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 52,380,538.20
மேல் மாகாண மெகா பவர் 23+ சீட்டிழுப்பு இலக்கம் 1045 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,669,080.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 239,492,330.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A சுப்பர் இலக்கம் 25 வெற்றி இலக்கங்கள் 01 26 51 77
தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் : 727 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,100,580.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 43 55 61 77 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,895,527.60
ஜாதிக சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் : 1219 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,398,500.00
வெற்றி இலக்கம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 8 9 6 9 7 7 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,298,052.80
ஜாதிக லொதரஸி மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேவானிய N.W.L. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மார்ச் 7
திங்கட்கிழமை

வவுனியா மன்னார் வீதி குருக்கள்புதுக்குளம் பகுதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் இருந்து பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிள் ஒன்று ஏற முற்பட்டுள்ளது. இதன் போது மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பேரூந்து மோட்டார் சைக்கிளுடன் மோதி நேற்றுக் காலை 9.00 மணியளவில் விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் 35 வயது தந்தையும் 17வயது மகனும் உயிரிழந்துள்ளனர். வவுனியா விசேட நிருபர்

ஐ.நா. அறிக்கை காலத்திற்கு காலம் வரும் அறிக்கையே

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வவுனியா விசேட நிருபர்

காலத்திற்கு காலம் ஐ.நா அறிக்கைகள் வருவதுண்டு. எனினும் இங்கு எவ்வாறான நடவடிக்கைகள் உள்ளது என்பதிலேயே கூடுதல் கவனம் வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று (06.03) வவுனியாவில் கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில்,

நீண்ட கால இழுபறிக்கு மத்தியில் இலங்கையில் இருந்து 50 பேரும் இந்தியாவில் இருந்து 50 பேரும் கச்சதீவுக்கு போகலாம் என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஜனாதிபதியுடன் நான் கலந்துரையாடி இரு பக்கத்தில் இருந்தும் நூறு நூறு பேராக கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு செல்ல ஏற்பாடு செய்திருக்கின்றேன்.

கச்சதீவுக்கு நானும் செல்வதாக உள்ளேன். ஏனெனில் இருதரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்துவற்காக நானும் செல்வதாக உள்ளேன்.

இந்திய இழுவை மடி படகுகளால் பாதிக்கப்பட்ட மக்களினுடைய போராட்டங்களின் ஊடாக இலங்கை அரசாங்கம் எல்லைமீறி வந்து மீன்பிடியில் ஈடுபடுபவர்களை தடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு வருபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக அந்த தொழிலாளர்களை விடுவிப்பது என்றும் மறுபுறத்தில் படகுகளை அரசுடமையாக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதாகவும் முடிவெடுத்து அது நடைமுறைக்கு வந்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்கின்றன. எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகின்றார்.

அப்போது அமைச்சருடனான சந்திப்பு நடைபெறும். அதற்கு முன்னராக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை ஐ.நா ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர் கேட்டபோது,

இது காலத்திற்கு காலம் வரும் அறிக்கையே. ஆனால் இங்கு எவ்வாறான நடவடிக்கைகள் உள்ளது என்பதில்தான் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை கூட்டணி கட்சிகளின் அமைச்சர்கள் வெளியேற்றப்பட்டு அமைச்சு மாற்றங்கள் இடம்பெற்றமை அரசாங்கத்திற்கு பதிப்பில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் வவுனியாவில் உங்கள் கட்சி ரீதியாக மேற்கொள்ளப்பட்ட சம்பவமானது பலத்த விமர்சனத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் கட்சி ரீதியாக எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோது,

அவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். அதில் சாதக பாதக நிலைமைகள் உள்ளன. சரியான நிலைமைகளை அறிந்து அவ்வறான நிலைமைகள் தொடராமல் இருப்பதற்கு நாங்கள் முடிவு எடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்

தென்மராட்சியில் கிராமம் தோறும் தடுப்பூசி முகாம்

தென்மராட்சியில் இந்த வாரம் தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தடுப்பூசி முகாம் அமைத்து கொரோனா தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் தடுப்பூசி செலுத்தாதோர் பொது இடங்களில் நடமாட முடியாது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலை அடுத்து சாவகச்சேரி சுகாதார பிரிவு கிராமம் தோறும் தடுப்பூசி முகாம் அமைத்து பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தவுள்ளது. தென்மராட்சிப் பகுதியில் இதுவரை 22சதவீத மானோர் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் டோஸினை பெற்றுள்ள நிலையில் ஏனைய பொதுமக்களும் கிராமம் தோறும் தடுப்பூசி என்ற செயற்திட்டம் ஊடாக கொரோனா தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதாரத் தரப்பு கேட்டுக்கொண்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் இதுவரை 4 கொரோனா மரணங்கள் பதிவாகியிருப்பதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போதை மாத்திரைகளை உட்கொண்ட கட்டுவான் இளைஞன் உயிரிழப்பு!

போதை மாத்திரைகளை அதிக அளவில் உட்கொண்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை, கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய கட்டடத் தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட அவர், நேற்று முன்தினமிரவு உயிரிழந்தார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சடலமாக ஒப்படைக்கப்பட்டது.

மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி ஒருவரிடமிருந்து போதை மாத்திரைகளை இருவர் வாங்கியுள்ளனர்.

தண்ணீரில் நனைந்த போதை மாத்திரைகள் பல ஒன்றோடு ஒன்று ஒட்டியவாறு காணப்பட்டுள்ளது. அவற்றை ஒரேயடியாக உயிரிழந்த இளைஞன் உட்கொண்டார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. இரண்டு போதை மாத்திரைகளை உட்கொண்ட மற்றையவரிடமும் விசாரணையின் போது வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

இந்திய நடன கலைஞர் கலா மாஸ்டர் முல்லைத்தீவில்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

இந்திய நடன கலைஞர் கலா மாஸ்டர் முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட அவர் புதுக்குடியிருப்பு விசுவமடு மத்தி சனசமூக நிலைய மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட திரைப்பட கலைஞர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது கலா மாஸ்டர் மற்றும் அவரது துணைவர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் ஆ.ஜேன்சன் உள்ளிட்டவர்களுடன் கலைஞர்களும் கலந்துசிறப்பித்துள்ளார்கள்.

நிகழ்வில் சிறுவர்களின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்று சிறப்பாக வரவேற்கப்பட்டுள்ளார்கள்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களின் தேவை மற்றும் கலையினை வளர்க்கவேண்டிய தேவைகள் குறித்தும் கலா மாஸ்டரிடம் எடுத்துரைத்துள்ளார்கள்.

கிளிநொச்சியில் இரண்டாவது திறன் பாடசாலை திறப்பு

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் அனைத்து வகுப்பறைகளும்முற்றிலும் திறன் வகுப்பறைகளாக மறுசீரமைக்கப்பட்டு திறன் பாடசாலையாக மாற்றம் கண்டுள்ளது. இதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது திறன் பாடசாலையாக உருவெடுத்துள்ள கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயத்தின் வைபவ ரீதியான தொடக்கவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இவர்களுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் ச.பூலோகராஜா முதன்முதலாகமுல்லைவலயத்தில் திறன் பாடசாலையை உருவாக்கி முன்னுதாரணமாக திகழ்பவரும் மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபருமான ந. அமிர்தநாதனும் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் திறன் பாடசாலையை நிறுவிய கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய அதிபர் அ.பங்கையற்செல்வனும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலய கணணி வள நிலைய முகாமையாளர் நா. சந்திரமோகனும் கலந்துசிறப்பித்தனர்.

இத் திறன் வகுப்பறைகளுள் இரு திறன் வகுப்பறைகளை அமைப்பதற்கு சிவஞானம் சிறீதரனும் (பா.உ) இரண்டு திறன் வகுப்பறைகளை அமைப்பதற்கு ச.நித்தியானந்தனும் ஒரு திறன் வகுப்பறையை அமைப்பதற்கு பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் அனுசரணை வழங்கியிருந்தனர்.

'எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்த திட்டம்'

எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு எதிர்காலம், பொருளாதாரம், முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிய திட்டமொன்றை கொண்டு வர இருக்கின்றோம் என்று வனவள ஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் சீ. பீ. ரட்ணாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மணற்காடு, சவுக்கங் காட்டை பார்வையிடுவதற்காக அமைச்சர் சீ. பீ. ரட்ணாயக்கா நேற்று முன்தினம் (05) கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். மணற்காட்டில் அமைந்துள்ள சவுக்கங்காட்டை வனவள ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் கையகப்படுத்துவதற்காக எல்லைக் கற்கள் நாட்டப்பட்டிருந்த நிலையில் அமைச்சர் அங்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் விஜயத்தின்போது இப் பகுதி தமது இருப்பிட பகுதி எனவும் அங்கு வீடுகள், கிணறுகள் இருப்பதனையும் பொதுமக்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். மக்களது வாழ்க்கையும் வனமும் ஒன்றித்து இருக்கின்றது. அதைப் பிரித்து எதுவும் செய்வதை அனுமதிக்க விரும்பவில்லை எனவும் அப்பகுதி மக்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதனை செவிமடுத்த அமைச்சர் நேரே வந்து பார்ப்பதற்காகவே இங்கு வந்திருப்பதாகவும் நேரே வந்து பார்

வையிடாமல் ஒரு திட்டத்தை எடுக்க முடியாது எனவும் இது சம்பந்தமாக வர்த்தமானி இன்னும் வெளியிடப்படவில்லை. இது ஒரு திட்டமாகத் தான் இருந்தது. உங்களுக்கு ஒரு அசாதாரண நிலையை ஏற்படுத்த நாங்கள் விடமாட்டோம். உங்களுக்கு ஏற்றமாதிரி அமைக்கிறதுதான் எனக்கும் விருப்பம். ஆனால், வனவள அமைச்சர் என்ற ரீதியில் பொருளாதாரத்தை கூட்டுவதற்கு தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு எதிர்காலம், பொருளாதாரம், முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகத்தான் நாங்கள் இந்தப் புதிய திட்டத்தை கொண்டு வர இருக்கின்றோம். பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு தான் இந்தத் திட்டத்தை நாங்கள் செய்வோம். இது சம்பந்தமாக நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட தேவையில்லை. பொருளாதாரத்தை ஈட்டி அதிலிருந்து வருமானத்தை ஈட்ட, சந்தை வாய்ப்பையும், சுற்றுலாத்துறையையும் இங்கு கொண்டுவர இருக்கின்றோம். இவ்வாறு ஒரு கிராமம் எங்கும் ஆக்கப்படவில்லை. அதை உங்களுக்காக ஆக்கித் தருகின்றேன் என தெரிவித்தார். இக் கள விஜயத்தின் போது அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மேலதிக அரச அதிபர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கிழக்கின் குரல்

காத்தான்குடி வீதிகளில் கொவிட் தடுப்பூசி அட்டை பரிசோதனை

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் வீடு வீடாக ஆரம்பிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் கொவிட் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை வீடு வீடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வீடு வீடாகவும் வீதிகள் தோறும் கொவிட் தடுப்பூசி அட்டை பரிசோதனை செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சுகுணனின் வழிகாட்டலின் பேரில், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ. எல். நஸ்ருதீன் தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் உதவியுடன் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தாதியர்கள் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி போடும் அட்டையை பரிசோதனை செய்வதுடன், மூன்றாவது தடுப்பூசி பூஸ்டர் போடாதவர்களுக்கு அவ்விடத்திலேயே தடுப்பூசியை போடவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதே போன்று வீதிகளில் செல்கின்றவர்களிடமும் தடுப்பூசி அட்டை பரிசோதனை செய்யப்படுவதுடன், மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அவ்விடத்திலேயே தடுப்பூசியை போடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாயில் தீப்பந்தம் ஏந்தி போராட்டம்

தோப்பூர் குறூப் நிருபர்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருளுக்கான தட்டுப்பாடு மற்றும் மின்சார தடை என்பவற்றைக் கண்டித்தும் இதற்கான தீர்வினை அரசாங்கம் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியினால் சனிக்கிழமை (05) கந்தளாய் நகரில் தீப்பந்தம் ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டோர் வாசகங்கள் எழுதிய சுலோகங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

'படைப்பாக்க ஆளுமைகள்" நேர்காணல் நூல் வெளியீடு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பல்துறைப் படைப்பாளி பா.மோகனதாஸ் எழுதிய 'படைப்பாக்க ஆளுமைகள்' எனும் நூல் வெளியீடு, திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் சனிக்கிழமை (05) இடம்பெற்றது.

கவிஞர். எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாகவும், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் முகமட் நௌபர் சிறப்பு அதிதியாகவும் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் வரவேற்புரையினையும் திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆலய தேவஸ்தான குரு வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுரையினையும், முதற்பிரதியினையும் பெற்றார். இந்நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக ஆளுமையாளர்களின் (73) அனுபவங்களை பேசும் முதல் நேர்காணல் நூலாக விளங்குகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

நூலாசிரியரை பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பொன்னாடை போர்த்தி இதன் போது கௌரவித்தார். இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

ரொட்டவெவ குறூப் நிருபர்

ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதவாச்சி சந்தியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞரொருவர் சனிக்கிழமை (05) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை கெவல் 20 மதவாச்சி சந்தியில் வசித்து வரும் ரத்னாயக்க முதியோர் துலார சதுல (26 வயது) என தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது ஹொரவ்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைகழகத்தின் 25வது பொது பட்டமளிப்பு

மணல்சேனை, மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 25வது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக நல்லையா ஞாபகார்த்த கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இப் பட்டமளிப்பு விழாவானது, பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா தலைமையில் நடைபெறுவதுடன், இவ்விழாவின் 1ஆம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்தவும், 2ஆம் நாள் அமர்வில் விசேட அதிதியாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.கபில சீ.கே.பெரேராவும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், விசேட உரையினையும் ஆற்றவுள்ளனர்.

இவ்விழாவில் காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும், சீனித்தம்பி கோபாலசிங்கம் கௌரவ இலக்கிய முதுமாணிப்பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் முதலாவது நாள் இடம்பெறவுள்ள பட்டமளிப்பு நிகழ்வுகள் மூன்று அமர்வுகளாக இடம்பெறவுள்ளதுடன், இதன்போது 883 மாணவர்களும், இரண்டாம் நாள் இடம்பெறவுள்ள மூன்று அமர்வுகளின்போது 1075 மாணவர்களுமாக முதுமாணி, இளமாணிப் பரீட்சைகளில் சித்திபெற்ற 1,958 மாணவர்கள் தங்களுக்கான பட்டங்களை இதன் போது பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பில் தொற்றா நோய்க்கு எதிராக விழிப்புணர்வு பவனி

மட்டக்களப்பு விசேட,மட்டக்களப்பு குறூப் , புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

தொற்றா நோய்க்கு எதிராக ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில், பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் துவிச்சக்கரவண்டி பவனி மற்றும் ஊர்வலம் என்பன சனிக்கிழமை (05) மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் குணசிங்கத்தின் வழிகாட்டலில், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்து ஆரம்பமான துவிச்சக்கரவண்டி பவனி காந்திப் பூங்காவை வந்தடைந்நது.

பின்பு காந்திப் பூங்காவிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் மருத்துவ துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் சகிதம் விழிப்புணர்வு ஊர்வலம் அரசடி மணிக்கூட்டுக் கோபுரத்தையடைந்து தேவநாயகம் மண்டபத்தை சென்றடைந்தது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மாவட்ட தொற்று நோயியல் பிரிவு, அமிர்தகழி சித்தி விநாயகர் வித்தியாலயம், மாமாங்கேஸ்வரா வித்தியாலயம் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், தொற்றா நோய்க்கு காரணமான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் விழிப்புணர்வுப் பதாதைகளை தாங்கியவாறு மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், சுகாதார வைத்திய அதிகாரி எஸ். உதயகுமார், மாநகர ஆணையாளர் மாணிக்கவாசகர் தயாபரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விவசாய துறையை கட்டியெழுப்ப அரசினால் புதிய வேலை திட்டங்கள்

அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெரும் பங்காற்றி வரும் விவசாயத் துறையை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் புதிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக, அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ. சனீர் தெரிவித்தார்.

பாலமுனை விவசாய பயிற்சி கல்லூரியில் 2018/2019 கல்வியாண்டுக்கான ஆங்கில மொழி மூல டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்த டிப்ளோமாதாரர்களுக்கான பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை (04) விவசாயக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கொவிட்19 தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை மீள கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் சிறந்த முறையில் வேலைத்திட்டங்களை முன்கொண்டு செல்கின்றது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

டிப்ளோமா சான்றிதழானது உங்களது வாழ்க்கையின் முதல் படியாகும். மேலும் உயர் தரமான கற்கை நெறிகளை மேற்கொண்டு முன்னேறி நாட்டின் விவசாயத்துறைக்கு பெரும் பங்காற்ற வேண்டும்.

குறைந்த வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பாடசாலை தற்போது, இங்குள்ள அதிகாரிகளின் முயற்சியினால் பரினாம வளர்ச்சியடைந்து சகல வசதிகளும் கொண்ட ஒரு பாடசாலையாக அமைந்துள்ளது.

இலங்கையில் காணப்படும் விவசாயப் பாடசாலைகளில் இப் பாடசாலை ஒரு முன்மாதிரியாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விவசாயக் கல்லூரிகளில் போதிக்கப்படும் கல்வி நடவடிக்கைகள் என்.வி.கியூ. மட்டம் 05 தரத்திலானதாகும். இது இங்குள்ள மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரபிரசாதமாகும். இதனை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

மூதூர் மத்திய கல்லூரிக்கு நிதி

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் கொண்டாடப்படவிருக்கும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இடம்பெற்றுவரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளுடன் , அலங்கார அபிவிருத்தி மற்றும் அழகுபடுத்தல் வேலைக்காக 10 இலட்சம் ரூபா நிதி மூதூர் பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் பல்வேறு வகையான உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் கல்லூரி அதிபர் எஸ்.ஏ.முஹீர் தலைமையில் பாடசாலை நூற்றாண்டு விழா குழுவினர் மற்றும் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மூதூர் பிரதேச சபை மூலமாக அலங்கார அபிவிருத்திக்கென 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தெரிவித்தார்.

சொகுசு காரில் மான் இறைச்சி; இருவர் கைது

மட்டக்களப்புகுறூப்நிருபர்

மட்டக்களப்பு ஏறாவூரில் இருந்து காத்தான்குடிக்கு கார் ஒன்றில் மான் இறைச்சி எடுத்துச் சென்ற இருவரை மட்டக்களப்பு நகர் பகுதியில் வைத்து சனிக்கிழமை (5) கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்த 6 கிலோ கிராம் மான் இறைச்சியை மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் கண்காணிப்பில் ஈடுபட்டுகொண்டிருந்தனர்.

இந்நிலையில் பொலிசார் காரை நிறுத்தி சோதனையிட்டபோது சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்ட, மான் இறைச்சி கண்டு பிடிக்கப்பட்டது.

கடல்மீனுக்கு தட்டுப்பாடு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்வதால் மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில், கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க செல்லாத காரணத்தினால், கடல்மீனுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதுடன், கடல்மீன்கள் கூடுதலான விலைக்கு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. இதே வேளை ஆறு, குளம் மற்றும் வாவிகளில் பிடிக்கப்படும் ஆற்று மீனுக்கு கடும் கிராக்கி நிலவுவதுடன், குளத்து மீன்வகைகள் முன்னரை விட இரண்டு மடங்கு கூடிய விலைக்கு விற்கப்படுகின்றன.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் மாட்டிறைச்சி 1400 ரூபாய்க்கும், கோழியிறைச்சி 800 முதல் 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

மலைச்சாரலி

இ.தொ.க செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கொட்டகலை CLF வளாகத்தில் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

மாசி மாத மகா சிவராத்திரி நிகழ்வை முன்னிட்டு கண்டி பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில ஆறு சாமப் பூசைகளும் கலை நிகழ்ச்சிகளும் வெகு விமரிசையாக இடம்பெற்றன இதன்போதான நிகழ்வுகள் சிலவற்றைப் படங்களில் காணலாம். (படம்: புசல்லாவை தினகரன் நிருபர்)

மலையக மக்களுக்கு குரல் கொடுப்பதில் இலங்கை தமிழரசுக்கட்சி பின்னிற்காது

(உக்குவளை விஷேட நிருபர்)

நாட்டில் வடகிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்கும் எங்கள் குரல், மலையக மக்களுக்காகவும் ஓங்கி ஒலிக்குமென பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மாத்தளை நகரில் தெரிவித்தார்.

பயங்காரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமென வலியுறுத்தி மாத்தளை நகரில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,மலையக மக்களுக்காக 1949 ஆண்டிலிருந்தே இலங்கை தமிழரசுக் கட்சி குரல் கொடுத்து வந்துள்ளது. இதை தமிழ்பேசும் மக்கள், கல்விமான்கள், புத்தி ஜீவிகளும் நன்கு அறிவர். இந்த உண்மையை சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மறைத்து மக்களை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். இந்த சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளை மக்கள் இன்று அடையாளம் கண்டு அவர்களை அரசியலிருந்து ஓரங்கட்ட சகுனம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

தோட்டத்தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள பிரச்சினையைக் கூட, நாமே சர்வதேச மயபடுத்தினோம். எனவே மலையக மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம், போராடுவோம்.

மாத்தளை மாவட்டத்தில் தமிழ் மொழி பேசும் தமிழ், முஸ்லிம்கள் பரவலாக இருந்தபோதும், ஒருவரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய முடியாதுள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இந்த இலக்கை நோக்கி இன்றுமுதல் நாம் செயல்பட்டால், அடுத்து வரும் பொதுத் தேர்தலில் நிச்சயம் மாத்தளை மாவட்டத்திலிருந்து ஒரு தமிழ்மொழி பேசக் கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாகலாம்.

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய கும்பாபிஷேகத்தையும் பசுக்கள் சரணாலயத்தையும் சிறப்பாக நடத்த ஏற்பாடு

செந்தில் தொண்டமான் உறுதிமொழி

சர்வதேச கிருஷ்ண பக்திக்கழக இலங்கைக் கிளையின் கீழ் கொட்டாஞ்சேனையில் இயங்கும் ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம் இவ்வருடம் ஆவணி மாதம் கும்பாபிஷேகத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் அதற்குத் தேவையான சில அபிவிருத்தி வேலைகளைச் செய்து தருவதாவும், அத்துடன் மேற்படி ஆலயத்தால் வத்தளையில் நடத்தப்பட்டு வரும் கோசாலை பசுக்கள் சரணாலயம் போதிய வசதிகளின்றி மிகுந்த சிரமத்துடன் நடத்தப்பட்டு வருவதால் அதனை வசதியான இடத்துக்கு மாற்றி சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்து தருவதாகவும் இ.தொ.கா. உபதலைவரும், பிரதமரின் இணைப்பாளருமான செந்தில் தொண்டமான் இணக்கம் தெரித்துள்ளார்.

கிருஷ்ண பக்திக் கழக தலைவர் ஸ்ரீமான் மஹாகர்த்தா தாஸ் அண்மையில் ஆலய பக்தர்கள் இருவர் சகிதம் செந்தில் தொண்டமானை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து அவருக்கு தமது ஆலய வெளியீடான பகவத் கீதை பிரதியொன்றையும் கையளித்து உரையாற்றியபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

வத்தளையில் இயங்கும் கோசாலை பசுக்கள் சரணாலயத்துக்கு ஜீவகாருண்ய சிந்தையுள்ள பலர் கொல்லப்படவிருக்கும் பசுக்களை மீட்டெடுத்து பராமரிக்குமாறு ஒப்படைத்து வருகின்றனர்.

இவ்வாறு பெறப்பட்ட பசுக்கள் மட்டும் சுமார் 40 வரையில் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஜீவகாருண்ய சிந்தையுள்ள இன்னும் அநேகர் தொடர்ந்தும் இவ்வாறு கொல்லப்படவிருக்கும் பசுக்களை மீட்டெடுத்து இங்கு கையளிக்க முன்வரும்போதிலும் அவற்றை பராமரிக்க போதிய வசதி இல்லாத நிலைமையை கிருஷ்ண பக்தி கழகத் தலைவர் மஹாகர்த்தா தாஸ், செந்தில் தொண்டமானிடம் எடுத்துரைத்தார். அவற்றை மிகுந்த அக்கறையுடன் செவிமடுத்ததை அடுத்தே தொண்மான் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இரத்தினக்கல் அகழப்படுவதால் ஆற்று நீர் மாசடைவதாக கவலை

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

வேகங்கை பாலத்தின் கீழ்ப்பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழப்படுவதால்,சூழல் மாசுபடுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், வேகங்கையின் நீர் சேற்று நீராக மாறியுள்ளதுடன், ஆற்று நீரை பாவிக்க முடியாதுள்ளதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு சம்பந்தமாக பொலிஸாருக்கும் மற்றும் இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைக்கும் அறிவித்துள்ள போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக பொலிஸாரிடமும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையிடம் வினவப்பட்டது. இந்நிறுவனங்களின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது, இந்த சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு சம்பந்தமாக பொறுப்பு கூறக்கூடிய விதத்தில் எந்த முறைப்பாடும் இதுவரை செய்யப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் பெயர் குறிப்பிடாத தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. இத்தொலைபேசிகளுடன் மீண்டும் தொடர்பு கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சிலம்படி, தற்காப்புக் கலை மட்டுமல்ல தமிழர்களின் அடையாளமும் இதுவே

(ஹற்றன் விஷேட நிருபர்)

சிலம்பு என்பது தற்காப்பு கலை மட்டுமல்ல, அது தமிழர்களின் அடையாளமுமாகும். எனவே இந்த தற்காப்பு கலையை கொட்டகலை பகுதியில் நடத்துவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதாக

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். கொட்டகலையில் நடைபெற்ற சிலம்பாட்ட போட்டி, பரிசளிப்பு விழா என்பவற்றில் நேற்று (06) சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு பேசிய அவர்,

சிலம்படி கலையை வளர்ப்பதற்காக கொட்டகலை சீ.எல்,எப் வளாகத்தில் ஏற்பாடுகளை செய்துள்ளேன் எதிர்காலத்தில், மிகப்பெரிய சிலம்பாட்ட போட்டியும் நடாத்தப்படவுள்ளது.

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இக்கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும்.இன்றைய நெருக்கடி நிலைமைகள் இன்னும்சில நாட்களில் மாற்றமடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போட்டி நிகழ்வில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 200 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தொடுகை சிலம்பு, வீச்சில் சிலம்பு ஆகிய போட்டிகள் இடம் பெற்றதுடன் கண்காட்சிகளும் நடைபெற்றன.

இதன் போது மலையகத்தில் பல்வேறு துறையில் சாதனை படைத்தவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

எரிபொருட்களை நிரப்புவதில் தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை வழங்க கோரிக்கை

(தலவாக்கலை குறூப் நிருபர்)

சில நாட்களாக தலவாக்கலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் தட்டுப்பாடு காரணமாக

தலவாக்கலையிலிருந்து தோட்ட பாதைகளுக்கான தனியார் பஸ் சேவைகள், தடைப்பட்டுள்ளதாக பஸ் சாரதிகள் தெரிவித்துள்ளனர். தலவாக்கலை நகரிலிருந்து பூண்டுலோயா, இராணிவத்தை, எல்ஜின், டயகம, சென்கூம்ஸ், மடக்கும்புர, மட்டுக்கலை, நோனாவத்தை, போபத்தலாவ ஆகிய பகுதிகளுக்கான பஸ் சேவைகளே தடைப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இச் சேவைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் மலையக தேயிலை தோட்டங்களின் அன்றாட நடவடிக்கைகளும் மரக்கறி போக்குவரத்தும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இதையடுத்து,பஸ் சேவைகளை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடன் நேற்று (06) தலவாக்கலையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒருமுறையே எரிபொருள் நிலையங்களுக்கு டீசல்,பெட்ரோல் அனுப்பப்படுகிறது. இவை,நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கூட போதாது என்றும், தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாரதிகள் கூறுகின்றனர்.

டீசல், பெற்றோல், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மாத்தளை மாநகரில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: உக்குவளை விஷேட நிருபர்)

வலது குறைந்தோருக்கான இலவச மருத்துவ முகாம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

சயில் பண்ட் மற்றும் வொயிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில், நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடாத்திய வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாம், லிந்துலை மெராயா பாடசாலையில் (05) இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கும் அதிகமான வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வொயிஸ் நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி தர்மேந்திரராஜா, நுவரெலியா மாவட்ட சமூக உத்தியோகத்தர் வி.ஏ.பிரியந்த டி சில்வா, பிரதேச சமூக உத்தியோகத்தர் ஆர். டி.குமாரதாஸ ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைகள் எதிர்நோக்கும் பாதி பிரச்சினைகளை அ,தி குழுவால் தீர்க்க முடியும்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுக்களை வலுப்படுத்துவதனூடாக,பாடசாலைகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென,மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.எம் உனைஸ் தெரிவித்தார்.

தெஹிதெனிய மடிகே, முஸ்லிம் மகா வித்தியாலத்தில் நடைபெற்ற பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் இக்ராஹ் நலன்புரிச் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த இவ்விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலைகளில் நிலவுகின்ற பௌதிக வள, மனிதவள பற்றாக்குறைகள் மற்றும் சமூக இடைத்தொடர்பின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை, நிவர்த்திப்பதில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுக்களுக்கு பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும். பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு என்பது, ஒட்டுமொத்த பாடசாலை மற்றும் பாடசாலைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும்.இதில் பங்கு வகிப்போர் எவரும் இதனைத் தன்னோடு சம்பந்தப்படாத ஒன்றாகப் பார்க்க முடியாது.

இதில் உள்ள ஆசிரிய உறுப்பினர்கள் முழு ஆசிரிய குழாத்தினரதும் பிரதிநிதிகளாவர்.

பாடசாலை அபிவிருத்திக் குழுவோடு இணைந்து செயல்படும்போது, எந்த சவாலையும் இலகுவாக வெற்றி கொள்ள முடிகின்றது. வெற்றிகரமான அதிபர்கள் இதனைப் புரிந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த அணியினருக்கு தலைவைத்துவம் வகிக்கின்றனர்.

அபிவிருத்தித் திட்டமிடல், பாடசாலையின் பண்புசார் கல்வி அபிவிருத்தி, சமூகத் தொடர்புகள், பௌதிக வள முகாமைத்துவம் ஆகிய ஒவ்வொரு துறை சார்பாகவும் அனைத்து உறுப்பினர்களும் தமது பங்களிப்புகளை உணர்ந்து சரிவர செய்தால், பாடசாலையை முன்னேற்றுவது மிகவும் இலகுவானதாகும் என்றார்.

நகர்வலம்

அநுராதபுர மாவட்டத்தில்;

கொரோனா நோயாளர்களை இனங்காணும் உபகரணம் குறைவு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் கொரோனா நோயாளர்கள் தொடர்பில் இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட ருபிட் அன்டிஜென் பரிசோதனை உபகரணம் குறைபாடு காரணமாக அத்தியாவசிய பீ.சீ.ஆர் பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்படுவதாகவும் அதனால் ஒமிக்ரோன் தொற்று நோய்க்குள்ளான 20 - 25 நோயாளர்கள் மாத்திரம் இனங்காணப்படுவதாக அநுராதபுரம் மாவட்ட தொற்றுநோய்ப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆர்.எம். எஸ். ரத்நாயக்க தெரிவித்தார்.

விசேடமாக ருபிட் அன்டிஜென் பரிசோதனை நடத்துவதற்கு முடிந்தால் நாளொன்றிற்கு இனங்காணப்படும் ஒமிக்ரோன் (பாலூட்டி) சுரப்பி வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் எனவும் வைத்தியர் தெரிவித்தார்.

12 வயது தொடக்கம் 19 வரை பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பைசர் தடுப்பூசி 90 வீதத்தை தாண்டியுள்ளதாகவும் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி 65 வீதத்தைவிடவும் அதிகரித்துள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

அறபுக்கல்லூரி அதிபர்களுக்கு செயலமர்வு

வெலிகம தினகரன் நிருபர்

வயது 516 இடைப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் மாத்தறை . மாவட்டத்தில் அமைந்துள்ள அறபுக் கல்லூரிகளின் அதிபர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சியொன்று அண்மையில் மாத்தறை மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் வை. விக்ரமசிரி தலைமையில் நடைபெற்றது.

மாத்தறை மாவட்டத்திலுள்ள 10 அறபுக்கல்லூரிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள நிலையில் இயங்கி வருகின்றன. இவற்றின் அதிபர்கள், மௌலவிமார்கள், மற்றும் அதிகாரிகளுக்கே இத்தெளிவூட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பிராந்திய ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்

நாளை கிராமத்தை உருவாக்கும் வலிமையான பொறிமுறை

நாளை கிராமத்தை உருவாக்கும் வலிமையான பொறிமுறையாகவே பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக்கள் காணப்படுகின்றன. அவற்றின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடக் கூடாது என வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கிரிந்தபுகுல்வெல்ல பிரதேச ஒருங்கிணைப்புக் குழு ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் கிரிந்தபுகுல்வெல்ல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் தமது பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளை கலந்துரையாடக்கூடிய கௌரவமான இடம். உள்ளூர் மற்றும் கிராமிய மட்டங்களில் வெளிவரும் முன் மொழிவுகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் குழு அதிக கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய பரிசோதனை உத்தியோகத்தர்கள், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கூட்டு அர்ப்பணிப்பே கிராம அபிவிருத்திக்கான பங்களிப்பின் அடிப்படையாக அமைவதாகவும் அவர்களின் முறையான சேவை மிகவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிரிந்தபுகுல்வெல்ல பிரதேச சபையின் தலைவர் சனத் ஹெட்டியாராச்சி, கிரிந்தபுகுல்வெல்ல பிரதேச செயலாளர் ஏ.பி.டபிள்யூ. டி. ராஜபக்ஷ மற்றும் அரச அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

(பா)

பேருவளை, காலி வீதி ஹெட்டிமுல்லையில் அமைக்கப்பட்டுள்ள புட்சல் (Futsal) விளையாட்டுத்திடலும் பேர்கோ ஸிடி (Burgo City) பல்வகை உணவகத்தின் திறப்பு விழா 5 ஆம் திகதி சனிக்கிழமை தொழிலதிபரும், சமூக நலன் விரும்பியுமான பாஹிம் தாலிபின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபவரீதியாக திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட பிரதேச நகர, பிரதேச சபை உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் ஞாபகார்த்த கேக்கை இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த வெட்டுவதையும் கிரிக்கட் விளையாட்டை அமைச்சர் ஆரம்பித்து வைப்பதையும் பிரதம அதிதிக்கு தொழிலதிபர் பாஹிம் தாலிப் நினைவுக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்: பேருவளை விசேட நிருபர்

சிறுபோகத்தில்; 08 இலட்சம் ஹெக்டயரில் நெல் உற்பத்தி

திறப்பனை தினகரன் நிருபர்

எதிர்வரும் சிறு போகத்தின் போது சுமார் 08 இலட்சம் ஹெக்டயர் காணிகளில் இம்முறை நெல் உற்பத்தியை மேற் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பாரிய, நடுத்தர, மகாவலி நீர்ப்பாசன திட்டங்கள் ஊடாக சிறுபோகத்தின் போது நெல் உற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏப்ரல், மே மாதமளவில் இம்முறை சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பசளை விநியோகம் வழமை போன்று இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் மகளிருக்கான நடமாடும் சேவை நாளை

புத்தளம் தினகரன் நிருபர்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புத்தளம் பிரதேச செயலகம் மகளிருக்கான விசேட நடமாடும் சேவையொன்று நாளை 08 ம் திகதி

செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பகல் 1.00 மணி வரை புத்தளம் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதனூடாக தேசிய அடையாள அட்டை இல்லாத பெண்களுக்கு அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறான தேவையுடைய பெண்கள் கிராம உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இலவசமாக பிறப்பு சான்றிதழ் மற்றும் இலவசமாக புகைப்படம் பெற்றுக்கொடுக்கவும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உழவு இயந்திர வாள் பட்டதில் கடற்டை வீரர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புல் வெட்டிக் கொண்டிருந்த உழவு இயந்திரமொன்றின் வாள் துண்டொன்று கடற்படை வீரர் ஒருவரது உடலில் பட்டு பலத்த காயங்களுக்குள்ளான கடற்படை வீரரை சிகிச்சைக்காக வேண்டி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது உயிரி ழந்துள்ளதாக பூனேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 03 ஆம் திகதி மதவாச்சி பூனேவ கடற்படை முகாமில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். பூனேவ கடற்படை முகாமில் சேவைசெய்து வந்த 21 வயதுடைய கடற்படை வீரர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடமையில் இருந்த இரு வீரர்கள் முகாமிற்குள் இருக்கும் படைவீரர்கள் வெடி வைத்து பயிற்சி எடுக்கும் மைதானப்பகுதிக்கு (வெடி தளாவ) சென்று மீண்டும் முகாமிற்குள் வரும் போது அங்கு புல் வெட்டிக் கொண்டிருந்த உழவு இயந்திரத்தின் வாள் துண்டொன்று பட்டதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை மதவாச்சி பூனேவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

உடைந்து வீழ்ந்த புறாத்தீவு பாலத்தை

உடனடியாக திருத்தி அமைக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

மாத்தறை தினகரன், வெலிகம தினகரன் நிருபர்கள்

மாத்தறை கரையோரப் பூங்காவை அண்டியுள்ள தங்கத்தீவு என அழைக்கப்படும் புறாத்தீவுக்குச் செல்லும் பாலம் வெள்ளிக்கிழமை (04) மாலை திடீரென உடைந்து வீழ்ந்துள்ளது. இதனைத்தொடர்ந்து அதற்குப் பதிலாக புதிய பாலமொன்றை நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருந்தெருக்கள் அமைச்சருக்கு உடனடியாக பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்தத் தீவுக்குச் செல்வதற்காக உள்ள பாலம் நீண்ட காலமாக பழுதடைந்து காணப்பட்டது. இப்பாலம் உடைந்து வீழ்ந்துள்ளதை தொடர்ந்து இத்தீவுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கைக்குரிய ஓமாரே காசியப்ப தேரர் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்குகொண்டு வந்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி உடனடியாக சம்பந்தப்பட்டோருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இந்தத்தீவு உள்நாட்டு, வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த ஓர் அமைவிடமாகும். நிர்மாணப் பணிகளை கண்டறிவதற்காக அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத் தாபனத்தின் அதிகாரிகள் சனிக்கிழமையன்று (05) இங்கு வந்து ஆராய்ந்தனர்.

பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஆறு மாதத்திற்குள் பூர்த்தி செய்வதாக பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஆர். டப்ளியூ. பிரேமசிறி நம்பிக்கை தெரிவித்தார். அதுவரை தற்காலிக பாலமொன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம் மாவட்டத்தில் டீசலுக்கு தட்டுப்பாடு; நீண்ட கியூவரிசை

எதிர்வரும் நாட்களில் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கும் என்கிறார் பெ.கூ.தலைவர்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்டத்தில் கடந்த பல வாரங்களாக டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், தற்போது சமையல் எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால், பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனினும், புத்தளத்தில் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையில் கொரோனா பரவல் ஏற்படத் தொடங்கியதற்கு பின்னர் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பனவற்றின் விலை அதிகரித்து வருகிறது.

சிலாபம் முதல் புத்தளம் வரையான பிரதான வீதி, பாலாவி கற்பிட்டி பிரதான வீதி, புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதி, புத்தளம் குருநாகல் பிரதான வீதிகளில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கடந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு டீசல் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், குறித்த வீதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் வாகனங்கள் வீதியோரத்தில் தரித்து நின்றுள்ளமையை அவதானிக்க முடிந்தது. இந்நிலையில், நாட்டுக்கு தேவையான எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளதாலும் நாடளாவிய ரீதியில் விநியோகம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும் எதிர் வரும் நாட்களில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நுகர்வோர், சாதாரண அளவை விட அதிகமாக எரிபொருளை நிரப்புவதும், கேன்கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை சேமிப்பதும் தான் இந்த திடீர் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

அட்டுலுகம அல்கஸ்ஸாலி ஆரம்ப வித்தியாலயத்தின் நுழைவாயில் மற்றும் மதில் அமைப்பு வேலைகள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் பாடசாலைக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை, அதிபர் எம்.என்.எம். ஜொலிபர் தலைமையிலான பிரமுகர்கள் வரவேற்பதை படத்தில் காணலாம். படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் மொழி மூல பிரிவுகளின் ஆலோசகருக்கான நியமன கடிதத்தை, கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவிடமிருந்தது புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

வளர்ச்சி பெறும் பிராந்தியங்களில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் நிறுவனத்தினால் நிதியிடப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம்

(RIDEP) Loan No.: SL-P116

செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை – ஊவா மாகாணம்

Tender No.: PL/5/W/RIDEP/2022/03/1

விலைமனுக்களுக்கான அழைப்பு - 02 ஆம் கட்டம்

1. வளர்ச்சி பெறும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் நிறுவனத்தினத்திடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்று பின்வருமாறு குறிப்பிட்டுள்ள கிராமிய வீதிகளின் மேம்படுத்தல்களுக்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக பிரயோகப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   - இலுக்பலஸ்ஸ-தொடம்கொள்ள வீதியின் மேம்படுத்தல் (பணாவ-எல்ல வீதிக்கப்பால், நீளம் 9.00 கி.மீ.) பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச சபைக்கானது. Package No. SLP116/UP2/RR/2021/16.
   - பல்லேவெல-நாஹாகெடிய வீதியின் மேம்படுத்தல் (நீளம் 2.175 கி.மீ.), பல்லேவெல-கணேதன்ன வீதி (வெலிமட-உடபுஸ்ஸலாவ வீதிக்கு அப்பால், நீளம் 1.11 கி.மீ) மற்றும் மெதகொடகம வீதி (வெலிமட-நுவரெலிய வீதிக்கு அப்பால், நீளம் 4.282 கி.மீ.) பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம பிரதேச சபைக்கானது- Package No. SLP116/UP2/RR/2021/17
   - ஹெலயாய (பலவத்த வீதி, நீளம் 1.2 கி.மீ) மற்றும் கொஸ்கொல்ல-தம்பகஹாமடித்த வீதி (B036 வீதிக்கப்பால் - நீளம் 2.43 கி.மீ) மற்றும் பதுளை மாவட்டத்தின் பசறை மற்றும் சொரணயதொட்ட பிரதேச சபைக்கானது – Package No. SLP116/UP2/RR/2021/18.
   - விலைமனுக்கோரலானது ஜப்பானின் ஓடிஏ கடன்களின் கீழான பெறுகைக்கான ஏற்புடையதான வழிகாட்டிகளுக்கமைவாக நடாத்தப்படுவதுடன் கடன் ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுள்ள வள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெற்றலாம்.
   - இந்த ஒப்பந்தங்களின் தொழில் வழங்குநரின் சார்பாக மேலேயுள்ள வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருவதுடன் விலைமனு ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில தகுதித்தன்மை தகவுத்திறன்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

இல.	மாகாணம்	ஊவா		
1.	விலைமனு பொதி/ உருப்படி இல.	SLP116/UP2/RR/2021/16	SLP116/UP2/RR/2021/17	SLP116/UP2/RR/2021/18
2.	ஒப்பந்தக் காலம்	15 மாதங்கள்	15 மாதங்கள்	12 மாதங்கள்
3.	விலைமனு செல்லு படியாகும் காலப்பகுதி	2022.08.23 ஆம் திகதியன்று வரையும்	2022.08.23 ஆம் திகதியன்று வரையும்	2022.07.26 ஆம் திகதியன்று வரையும்
4.	விலைமனுப் பிணையின் பெறுமதி (இ.ரூபாவில்)	5.3 மில்லியன் (2022.09.20 ஆம் திகதியன்று வரையும்)	5.7 மில்லியன் (2022.09.20 ஆம் திகதியன்று வரையும்,	3.4 மில்லியன் (2022.08.23 ஆம் திகதியன்று வரையும்)
5.	மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (இ.ரூபாவில்)	45,000.00	45,000.00	35,000.00
6.	தகுதித்தன்மை தகவுத்திறன்	(i) நெடுஞ்சாலை நிர்மாணத்தில் சி-2 மற்றும் மேற்பட்ட CIDA பதிவுத் தரம்.	(i) நெடுஞ்சாலை நிர்மாணத்தில் சி-2 மற்றும் மேற்பட்ட CIDA பதிவுத் தரம்.	(i) நெடுஞ்சாலை நிர்மாணத்தில் சி-2 மற்றும் மேற்பட்ட CIDA பதிவுத் தரம்.
		(ii) இலங்கையின் மத்திய அல்லது மாகாண வியாபார பதிவு அதிகாரசபையின் வியாபார பதிவின் பிரதி. (iii) பிசிஏ-3 படிவம் (கேள்விதாரரின் சார்பாக முகவரொருவராக, உப-முகவரொருவராக, பிரதிநிதியாக செயற்படுபவரின் பதிவுச் சான்றிதழ்)		
7.	வீதிகளின் பெயர்கள் மற்றும் நீளம் (கி.மீ)	ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச சபையின் இலுக்பலஸ்ஸ-தொடம்கொள்ள வீதியின் மேம்படுத்தல் (பணாவ-எல்ல வீதிக்கப்பால், நீளம் 9.00 கி.மீ.)	ஊவா மாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம பிரதேச சபையின் பல்லேவெல-நாஹாகெடிய வீதியின் மேம்படுத்தல் (நீளம் 2.175 கி.மீ.), பல்லேவெல-கணேதன்ன வீதி (வெலிமட-உடபுஸ்ஸலாவ வீதிக்கு அப்பால், நீளம் 1.11 கி.மீ) மற்றும் மெதகொடகம வீதி (வெலிமட-நுவரெலிய வீதிக்கு அப்பால், நீளம் 4.282 கி.மீ.)	ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பசறை மற்றும் சொரணயதொட்ட பிரதேச சபையின் ஹெலயாய (பலவத்த வீதி, நீளம் 1.2 கி.மீ) மற்றும் கொஸ்கொல்ல-தம்பகஹாமடித்த வீதி (B036 வீதிக்கப்பால் - நீளம் 2.43 கி.மி)
8.	நிதியிடல் நிலபரம்	354 மில்லியன் இ.ரூபா. கடந்த 3 வருடங்களில் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு	378 மில்லியன் இ.ரூபா. கடந்த 3 வருடங்களில் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு	284 மில்லியன் இ.ரூபா. கடந்த 3 வருடங்களில் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு
9.	நிதியிடல் வளங்கள்	94 மில்லியன் இ.ரூபா ஆகக் குறைந்த திரவச் சொத்துக்களின் தொகை (இந்த செயற்றிட்டத்திற்காக திரவச் சொத்துக்கள் வங்கி உத்தரவாத பாங்கில் இருத்தல்) அல்லது கடன் வசதி.	100 மில்லியன் இ.ரூபா ஆகக் குறைந்த திரவச் சொத்துக்களின் தொகை (இந்த செயற்றிட்டத்திற்காக திரவச் சொத்துக்கள் வங்கி உத்தரவாத பாங்கில் இருத்தல்) அல்லது கடன் வசதி.	75 மில்லியன் இ.ரூபா ஆகக் குறைந்த திரவச் சொத்துக்களின் தொகை (இந்த செயற்றிட்டத்திற்காக திரவச் சொத்துக்கள் வங்கி உத்தரவாத பாங்கில் இருத்தல்) அல்லது கடன் வசதி.
10.	நிர்மாண அனுபவம்	கடந்த 07 வருடங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட 175 மில்லியன் இ.ரூபாவிற்கு குறையாத ஆகக் குறைந்தது 01 நிகரான தன்மையிலான ஒப்பந்தம்.	கடந்த 07 வருடங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட 190 மில்லியன் இ.ரூபாவிற்கு குறையாத ஆகக் குறைந்தது 01 நிகரான தன்மையிலான ஒப்பந்தம்.	கடந்த 07 வருடங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட 115 மில்லியன் இ.ரூபாவிற்கு குறையாத ஆகக் குறைந்தது 01 நிகரான தன்மையிலான ஒப்பந்தம்.
11.	விலைமனு முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜய திகதி மற்றும் நேரம்	2022.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு. விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தள விஜயமொன்று தீர்மானிக்கப்படும்.	2022.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு. விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தள விஜயமொன்று தீர்மானிக்கப்படும்.	2022.03.16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு. விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தள விஜயமொன்று தீர்மானிக்கப்படும்.
12.	விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கான இடம்	பதுளை, பண்டாரநாயக்க மாவத்தை, 37/2 ஆம் இலக்கத்தில் ஊவா மாகாண, RIDEP/ செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை.		

குறிப்பு:
- CIDA பதிவுத் தேவைப்பாடு கூட்டு முயற்சியாகவிருத்தல். தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனின் 2.1.4 இலக்கமுடைய உட்கூறை தயவு செய்து பார்க்கவும்.

அட்டவணை (1)

4. அட்டவணை (1) இன் 5 ஆம் பிரிவில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள அட்டவணை (2) பிரகாரம், முகவரிகளுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பரீட்சித்த பின்னர் கொள்வனவு செய்யப்படலாம். கீழேயுள்ள 2 ஆம் அட்டவணையின் பிரகாரம், 2022.03.07 ஆம் திகதியிலிருந்து 2022.03.28 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கள் வழங்கப்படும்.

   கீழேயுள்ள 2 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கிற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் தவிர்க்க இயலாத சூழ்நிலைகளினால் (கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக) நேரடியாக வருகை தந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு இயலாத விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பிடிஎவ் பதிப்பு வழியாக அவற்றை பெறுவதற்காக கீழேயுள்ள 2 ஆம் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள உரித்தான உத்தியோகபூர்வ முகவரிக்கு மின்னஞ்சல் வழியாக டிஜிட்டல் பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டை அனுப்பி அவற்றை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அலுவலகப் பெயர்	அலுவலக முகவரி	தொலை பேசி இல.	தொலைநகல் இல.	மின்னஞ்சல்	வங்கி மற்றும் கணக்கிலக்கம்	விலைமனு பொதி இல.
RIDEP – செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை	இல.157ஏ, கின்ஸி வீதி, கொழும்பு-08	011-2667748	011-2667768	ridep@pclg.gov.lk	இலங்கை வங்கி, யூனியன் இடம், கணக்கிலக்கம் 0007040873	அனைத்து விலைமனு பொதிகள்
RIDEP – செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை (ஊவா மாகாணம்)	இல. 37/2, பண்டாரநாயக்க மாவத்தை, பதுளை	026-2224475	026-2224475	ridepuva@gmail.com	இலங்கை வங்கி, மேற்தரக் கிளை, பதுளை. கணக்கிலக்கம் 83130799	அனைத்து விலைமனு பொதிகள்

அட்டவணை (2)

5. சிறிய வேலைகளின் பெறுகைக்கான (2013 ஏப்ரல் பதிப்பு 1.1) ஜப்பானின் ஓடிஏ கடன்களின் கீழான தரமாக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களின் ஏற்பாடுகளே விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள் மற்றும் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளிலுள்ள ஏற்பாடுகளாகும்.
6. முத்திரையிடப்பட்ட மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு ''மேலேயுள்ள 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் .....ஆம் இலக்க பொதிக்கான விலைமனுக்கள்'' என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு 2022.03.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ''தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, நிதி பிரிவு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இல. 330, யூனியன் இடம், கொழும்பு-02'' என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள அதே அமைவிடத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாமென்பதுடன் மேலேயுள்ள 1 ஆம் அட்டவணையின் 4 ஆம் பிரிவின் பிரகாரமான விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையின் பாங்கானது நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டதும் அதிகாரமளிக்கப்பட்டதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமானதாகவுமிருத்தல் வேண்டும்.
7. கொழும்பு-02, யூனியன் இடம், 330 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதிப் பிரிவில் விலைமனுக்களை மூடிய பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

தலைவர்,
அமைச்சு பெறுகைக்குழு,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,
இல. 330, யூனியன் இடம், கொழும்பு-02.
தொலைபேசி: 011-2399735. தொலைநகல்: 011-2329725
மின்னஞ்சல்: secretary@pclg.gov.lk
திகதி: 07.03.2022

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் பிரதமரின் வழிகாட்டலில் கீழ் மொறடுவ மேயர் சமன்லால் பெர்னான்டோ நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் சொயிசாபுர நவோத்யா பூங்கா மாவத்தை காபர்ட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை மாநகர மேயர் அதிகாரிகள் சகிதம் பார்வையிடுவதை படத்தில் காணலாம். படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

கைத்தொழில் அமைச்சு

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

விலைமனுக்கோரல்

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான உஸ்வெவ, யட்டியன மற்றும் மஹியங்கன ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலைகளில் கீழ்க்காணப்படும் ஒரு தொகை ஓடுகள் சேர்ந்துள்ளன.

	தொழிற்சாலைகள்	தொகுதி	தரம்	எண்ணிக்கை
1	உஸ்வெவ	தட்டையான	I	299958
		ஓடுகள்	I I	9370
			I I I	38437
2	யட்டியன	தட்டையான	I	50069
		ஓடுகள்	I I	73522
3	மஹியங்கன	தட்டையான I	I	13214
		பீலி ஓடுகள்	I I	11505
		தட்டையான	I	7997
		பீலி ஓடுகள் I I	I I	11438

ஒவ்வொரு தொழிற்சாலையிலுமுள்ள மேற்படி தொகை ஓடுகளை கூடிய விலைக் கேள்விக்கு வழங்குவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

மீளளிக்கப்படாத ரூபா 500.00 இற்கான தொகையை செலுத்தி நாரஹேன்பிட்டியிலுள்ள பிரதான அலுவலகத்தில் அல்லது குறித்த தொழிற்சாலைகளில் இதற்கான விலை மனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கள் முத்திரையிட்டு முகவரியிடப்பட்ட உறையில் சேர்த்து பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஓடுகளிற்கான விலைமனு'' மற்றும் தொழிற்சாலையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

திறந்த மற்றும் தொலைநகல் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022.03.31 அன்று மு.ப. 11.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு, அன்றைய தினம் பி.ப.12.15 இற்கு பிரதான அலுவலகத்தில் அவை திறக்கப்படும்.

தலைவர், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்.
இல: 561/3,
எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு - 05

தொ.பே.இல: 0114063734, 0114063617, 0777804218

பெறுகை அறிவித்தல்

மேல் மாகாணத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் பிலியந்தலை, கரதியான, மிஹிசது வள முகாமைத்துவ நிலையத்திலிருந்து வத்தளை கெரவலப்பிட்டிய கழிவுப்பொருளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்றிட்டம் வரை உக்கிப்போகாத திண்மக்கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக வாடகை அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு கனரக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கழிவுப்பொருள் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கனகர இயந்திரோபகரணங்களை வாடகை அடிப்படையில் ஒருவருட காலத்திற்குப் பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	உருப்படி	விபரங்கள்	எண்ணிக்கை	விலைமனு ஆவணத் தொகுதி
01.	உக்கிப்போகாத திண்மக்கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்தல்	பிலியந்தலை, கரதியான, மிஹிசது வள முகாமைத்துவ நிலையத்திலிருந்து வத்தளை கெரவலப்பிட்டிய கழிவுப்பொருளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்றிட்டம் வரை உக்கிப்போகாத திண்மக்கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக வாடகை அடிப்படையில் கனரக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் (ஒரு வருட காலத்திற்கு)	வானத்தின் கொள்ளளவு மற்றும் கழிவுப் பொருள் ஏற்றப்படும் அளவைப் பொருத்து எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்	A
02.	கனரக இயந்திரோ பகரணங்கள்	PC-200 வகையான Long Arm Excavator இயந்திரத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் (ஒருவருட காலத்திற்கு)	01	B
		PC-200 வகையான Long Arm Excavator இயந்திரத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் மீள ஏற்றுவதற்காக (ஒரு வருட காலத்திற்கு)	01	C
		PC-200 வகையான Short Arm Excavator இயந்திரத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் (ஒருவருட காலத்திற்கு)	01	D

இதன் பொருட்டான விபரக் குறிப்புகள் அடங்கிய A, B, C, D விலைக்கோரல் ஆவணத் தொகுதிகளை 2022-03-07ஆம் திகதி முதல் 2022-03-21ஆம் திகதி வரையில் பி.ப. 2.00 மணி வரை இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லயில் அமைந்துள்ள மேல் மாகாண சபை கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு (மே.மா) ஒரு தொகுதிக்கு 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தமது நிறுனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை சகிதம் வேண்டுகோள் கடிதமொன்றை கொண்டு வருதல் கட்டாயமாகும். மேற்குறிப்பிடப்பட்ட சகல உருப்படிகளுக்குமான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை அலுவலக வளவில் 2022-03-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-03-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லயில் அமைந்துள்ள மேல் மாகாண சபை கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு (மே.மா) தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த விலைமனுக்கள் 2022-03-22ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையில் (மே.மா) திறக்கப்படும் என்பதுடன் இதில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் (மே.மா),
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.
தொலைபேசி: 0113056703/ தொலைநகல்: 0112613317

2022-03-07.

அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2)ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: டெவான் மீடியா (பீவிடீ) எல்டீடி

கம்பனியின் பதிவெண்: பிவி 120893

பதிவு அலுவலக முகவரி: இல. 1044/9, பொத்துஅராவ பாதை, மாலபே

கம்பனியின் புதிய பெயர்: சாகா வன் (பீவிடீ) எல்டீடி

பெயர் மாற்றத் திகதி: 2021.02.22

வோட்டர்ஸ் செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பீவிடீ) எல்டீடி

Repeat Your Ad For Better Offers

விசேட அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

12, Foxglove Grove, Cambuslang, Glasgow G72 6AE, ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் **பாதுக்க விதானலாகே தோன இந்திராணி சந்திரலதா ஜயசிங்க** விவாகத்துக்கு முன்னர் **தர்மகுணவர்தன** ஆகிய நான், ஜா-எல, தும்பெலிய வீதி, இல. 831/4B சேர்ந்த **ஹபுதந்திரிகே டிக்ஸன் சரத் ஜயசிங்க** என்பவருக்கு ஐக்கிய இராச்சிய சொலிசிட்டர் **டி.ஐ. விக்ரமசிங்கவினால்** 12.08.2017ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேனென்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேனென்றும் அத்தகைய செயல்களெதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேனென்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

பாதுக்க விதானலாகே தோன இந்திராணி சந்திரலதா ஜயசிங்க
விவாகத்துக்கு முன்னர் தர்மகுணவர்தன

விசேட அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

சுன்னாகம், சுன்னாகம் தெற்கு கதிரமலை வீதியைச் சேர்ந்த **சரவணமுத்து துரைசிங்கம்** ஆகிய நான், சுன்னாகம், சுன்னாகம் தெற்கு கதிரமலை வீதியைச் சேர்ந்த **கேசவன் செந்தில்ராஜா** என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு **தர்சினி கணகசபாபதியினால்** 12.08.2016ஆந் திகதி 179ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேனென்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேனென்றும் அத்தகைய செயல்களெதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேனென்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சரவணமுத்து துரைசிங்கம்

பெறுகை அறிவித்தல்

மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் உற்பத்தி நடவடிக்கைகளிற்குத் தேவையான பின்வரும் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது

1. பச்சை நூல் கொள்வனவு

நூல் பிரமானம்	விபரம்	தேவையான அளவு kg
2/80	சிக்கு வார்க்கப்பட்ட சின்ஜ் மர்ஸரயிஸ் (CM SGM)	11,000
2/30	(1) காடட் (Ring Spun) (2) காடட் (Open End Spun)	6,500
16	(1) காடட் CD R(Ring Spun) (2) காடட் CD (Open End Spun)	4000

2. இரும்பு மற்றும் சார்ந்த பதார்த்தங்கள்
12mm மிருதுவான உருக்கு (19.5) கம்பி 12,000 அண்ணளவாக
10mm மிருதுவான உருக்கு (19.5) கம்பி 2,000 அண்ணளவாக
12x6mm பக்கம் (19.5) இரும்பு 2,000 அண்ணளவாக மற்றும் உருக்கி ஒட்டும் கூறுகள்/ மைவகைகள்/ ஆணிகள்/ மணல் தாள்கள்/ ட்ரில் ஊசிகள் போன்றவை.

3. மரம் மூலப்பொருட்கள்
கொலொன் பலகை சுமார் 2000 அடி (நீள அடி மற்றும் ச. அடி)
கிணிசபு பலகை சுமார் 20000 அடி (நீள அடி மற்றும் ச. அடி)
மகோகணி பலகை சுமார் 2000 அடி (நீள அடி மற்றும் ச. அடி)

4. பலகை சார்ந்த பதார்த்தங்கள்
வர்ணப்பூச்சுக்கள்/ ஆணிகள்/மணல் தாள்கள்/ பசை வகைகள்/ அட்டைப்பலகைகள் போன்றவை

5. பாடசாலை மேசை மற்றும் கதிரைகளுக்கான கிணிசபு பலகைத் தொகுதிகள் சுமார் 10000

- இதற்கான விலைமனுப்படிவங்களை பச்சை நூல் கொள்வனவு மற்றும் இரும்பு மற்றும் அவை சார்ந்த பதார்த்தங்களுக்காக ரூபா 35000/- இற்கான மீளளிக்கப்படாத கட்டணம் மற்றும் பலகை மூலப்பொருள்களுக்காக மரப்பலகை சார்ந்த பதார்த்தங்களுக்காக மற்றும் பலகைத் தொகுதிகளுக்காக ரூபா 1000/- இற்கான மீளளிக்கப்படாத கட்டணம் (தனித்தனியாக) செலுத்தி 2022.03.08 முதல் 2022.03.25 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2022.03.28 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் 'தலைவர், பெறுகைக்குழு, கைத்தொழில் திணைக்களம், (மே.மா), புதிய மாகாண சபைக் கட்டிடம், 3ஆம் மாடி, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அவ் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும். 2022.03.28 அன்று பி.ப. 2.00 இற்கு விலைமனு திறக்கப்படும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
கைத்தொழில் திணைக்களம் (மே.மா),
204, மாகாண சபைகள் கட்டிடம்,
3ஆம் மாடி, பத்தரமுல்ல.
0112 092595/ 0112 092591

Sime Darby Plantation

பரிகாரத்திற்காக முன்னால் தொழிலாளர்களை நாடுதல் (இலங்கை)

சைம் டார்பி பிளாண்டேஷன் பேர்ஹெட் [(Sime Darby Plantation Berhad (SDB)] நிறுவனமானது சான்றுப்படுத்தப்பட்ட நிலைபேறான பனை எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடுகின்ற உலகின் மிகப் பெரிய உற்பத்தியாளராகும். எமது வேலையாட்கள் கட்டாயப்படுத்தப்பட்ட தொழில் மற்றும் சுரண்டல் நடைமுறைகளிலிருந்து விடுபட்டவர்கள் என்பதை உறுதி செய்வதற்காக எவ்வித கட்டணமும் இன்றிய ஆட்சேர்ப்பு கொள்கையுடனான பொறுப்புடைய ஆட்சேர்ப்புக்கு நாம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம்.

பொறுப்புடைய ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய எமது நடைமுறை பரிகார நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியொன்றாக, சைம் டார்பி பிளான்டேஷன் நிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியருக்கும் ஒருமுறை பரிகாரக் கொடுப்பனவை (பரிகாரக் கொடுப்பனவு) மேற்கொள்வதற்காக இந்த விளம்பரத் திகதியிலிருந்து 2 மாதங்களுக்குள் உரிமைக்கோரிக்கையொன்றை மேற்கொள்ளுமாறு 2018 நவம்பர் 1ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் கம்பனியிலிருந்து விலகிய சகல சைம் டார்பி பிளான்டேஷன் (SDB) முன்னால் ஊழியர்களையும் நாம் அழைக்கின்றோம்.

எதிர்பார்க்கப்படுகின்ற உரிமைக்கோரிக்கையாளர்கள் அவர்களின் உரிமைக் கோரிக்கைகளை மேற்கொள்கின்ற போது, உரிமைக்கோரிக்கையை மீளாய்வு செய்வதற்கும், பரிகாரக் கொடுப்பனவை பெறுவதற்கான உரிமைக்கோரிக்கையாளரின் தகைமையைத் தீர்மானிப்பதற்கும் மற்றும் உரிமைக்கோரிக்கையாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் பரிகாரக் கொடுப்பனவை பெறுவதற்கு உரிமைக்கோரிக்கையாளரால் நியமிக்கப்பட்ட வங்கிக் கணக்கின் உரிமையையும் சைம் டார்பி பிளான்டேஷன் நிறுவனத்தால் உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக்காக நியமிக்கப்பட்ட எமது சட்டத்தரணி **எப்ஜே என்ட் ஜீ டி சேரம் (எப்ஜே என்ட் ஜீ)** நிறுவனத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:

(i). வேண்டுகோளின்படி எப்ஜே என்ட் ஜீ நிறவனத்தால் வழங்கப்படக்கூடிய - உரிமைக்கோரிக்கை விண்ணப்பப்படிவம்
(ii). தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் (அசல் மற்றும் பிரதி)
(iii). சைம் டார்பி பிளான்டேஷன் நிறுவனத்துடன் தொழில் புரிகின்ற நேரத்தில் உரிமைக்கோரிக்கையாளருக்கு வழங்கப்பட்ட வேலை அனுமதிப்பத்திரம் (அசல் மற்றும் பிரதி)
(iv) கணக்கு வைத்திருப்பவரின் அடையாளம் மற்றும் வங்கிக் கணக்கு விபரங்களை உறுதிப்படுத்துகின்ற வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்று (அசல் மற்றும் பிரதி)
(v). உரிமைக்கோரிக்கையாளர் ஏதேனும் இறந்திருந்தால், உரிமைக்கோரிக்கை மேற்கொள்வதற்கு அனுகூலம் பெறுநர்களுக்கு தேவைப்படுகின்ற ஆவணப்பட்டியலை பெற்றுக் கொள்வதன் மின்னஞ்சல் ஊடாக அல்லது உதவித் தொலைபேசி இலக்கத்தினூடாக எப்ஜே என்ட் ஜீ நிறுவனத்தை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

உரிமைக்கோரிக்கையை மீளாய்வு செய்வதற்கு, உரிமைக்கோரிக்கையாளரின் அடையாளம் மற்றும் வங்கிக் கணக்கின் உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியப்படக் கூடிய மேலதிக விபரங்களை எப்ஜே என்ட் ஜீ மற்றும் சைம் டார்பி பிளான்டேஷன் நிறுவனங்களால் கோரலாம்.

உரிமைக்கோரிக்கை படிவம் ஒன்றை கோருவதற்கும், மேலே சொல்லப்பட்ட ஆவணங்களை எப்ஜே என்ட் ஜீ நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கட்ட பின்னர் எப்ஜே என்ட் ஜீ (மற்றும் உண்மையில் இணைந்து கொள்ளக் கூடிய சைம் டார்பி பிளான்டேஷன்) நிறுவனத்தால் நேர்காணல் ஒன்றை மேற்கொள்வதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும் மற்றும்/ அல்லது மேலதிக வினவுகைகளுக்கும் supportservices@fjgdesaram.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது 0768041921 என்ற உதவி இலக்கத்திற்கு வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிக்கு இடையில் எப்ஜே என்ட் ஜீ நிறுவனத்தை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

Remediation Payment Helpline
076 804 1921

Connect With Us
simedarbyplantation.com

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு மாதுளை அடுக்கு செடிகள் (பக்வான்), மாங் கன்றுகள் (Tom EJC), Tissue Culture வாழைக் கன்றுகள் (கோலிக்கூட்டு மற்றும் கெவன்டிஸ்) மற்றும் Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு மாதுளை அடுக்கு செடிகள் (பக்வான்), மாங் கன்றுகள் (Tom EJC), Tissue Culture வாழைக் கன்றுகள் (கோலிக்கூட்டு மற்றும் கெவன்டிஸ்) மற்றும் Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு மாதுளை அடுக்கு செடிகள் (பக்வான்), மாங் கன்றுகள் (Tom EJC), Tissue Culture வாழைக் கன்றுகள் (கோலிக்கூட்டு மற்றும் கெவன்டிஸ்) மற்றும் Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

விபரங்கள்	ஒப்பந்த இலக்கம்	எண்ணிக்கை	விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)
கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாதுளை அடுக்கு கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-273629-GO-RFB	42,000	200,000.00	5,000.00
வட மாகாணம் யாழ்ப்பாணம் மாகாணத்திற்கு மாங் கன்றுகளை (Tom EJC) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-273998-GO-RFB	66,250	240,000.00	5,000.00
வட மாகாணம் முல்லைத்தீவு மாகாணத்திற்கு Tissue Culture வாழைக் கன்றுகளை (கோலிக்கூட்டு) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-277286-GO-RFB	120,000	145,000.00	5,000.00
ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்திற்கு Tissue Culture வாழைக் கன்றுகளை (கெவின்டிஷ்) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-277612-GO-RFB	250,000	300,000.00	5,000.00
கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திற்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-273639-GO-RFB	60,000	145,000.00	5,000.00

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-03-08ஆம் திகதியிலிருந்து 2022-03-28ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-03-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-03-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு மாதுளை அடுக்கு செடிகள் (பக்வான்), மாங் கன்றுகள் (Tom EJC), Tissue Culture வாழைக் கன்றுகள் (கோலிக்கூட்டு மற்றும் கெவன்டிஸ்) மற்றும் Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக்குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521

திகதி: 2022-03-06.

வெற்றிடங்கள்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறைக்கு (CResMPA) செயற்றிட்ட பணியாட்தொகுதியினரை ஆட்சேர்த்தல்

நீர்ப்பாசன அமைச்சு

உலக வங்கியினால் நிதியிடப்படும் செயற்றிட்டமான காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (CResMPA) செயற்றிட்டத்திற்கு அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்றிட்ட முகாமைத்துவ பணியாட்தொகுதிக்கு பின்வரும் பதவிகளுக்கு ''ஒப்பந்த அடிப்படையில்'' ஆட்சேர்ப்பதற்காக தகுதி மற்றும் அர்ப்பணிப்புள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2019-03-15ஆம் திகதிய 2019/01ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 03ஆம் அட்டவணையிலுள்ள 03ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் 62 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இந்த பதவிகளுக்கான முன் நிபந்தனைகளாக ஆங்கிலத்தில் தேர்ச்சியுடன் அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும். இயையுடைய துறையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள வேலை அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.

இல.	PS வகுதி	பதவி	வெற்றிட எண்ணிக்கை	ஏற்புடைய சுற்றுநிருபம்
01	PS 3	சிரேஷ்ட சமூகப் பாதுகாப்பு மற்றும் மீள்குடியேற்ற நிபுணர்	01	2019/01ஆம் இலக்க MSD சுற்றுநிருபம்
02	PS 3	சிரேஷ்ட சுற்றாடல் பாதுகாப்பு நிபுணர்	01	
03	PS 4	செயற்றிட்டப் பொறியியலாளர் (ஒப்பந்த முகாமைத்துவம்)	01	
04	PS 5	சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி	01	

மேலதிக விபரங்களுக்கு www.irrigationmin.gov.lk எனும் இணையதளத்தை Log செய்யவும் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை நிதி அமைச்சின் இணையதளத்தில் பார்வையிடவும்.

ஒவ்வொரு பதவிக்குமான விண்ணப்பங்களை தனித்தனியாக அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2022 மார்ச் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பதில் செயற்றிட்டப் பணிப்பாளர்,
காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (CResMPA),
இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05.

குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
நீர்ப்பாசன அமைச்சு.
2022-03-03ஆம் திகதி.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
தொழிநுட்ப அமைச்சு
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

DRP

விலைமனுக்கோரல் (IFB)

VxRail Cluster சேர்வர் அமைப்புகள் 04 இனை ஒருவருட காலத்திற்கான சேவை மற்றும் பராமரிப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் உரிமத்தினை வழங்குதல்

IFB No: DRP/ACC/07/18/2022

